# தொண்டன்

ஆரம்பம் - 1969



மே - 2004

12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மே - 2004

மலர்-36 இதழ்-02

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்
மெற்றில்டா இராஜேந்திரம்
செல்லத்துரை ஜெயராஜா
பெஸ்லீயோ வாஸ்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/ மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு

**SOCIAL COMMUNICATIONS CENTRE**
**P.O. BOX - 44**
**BATTICALOA.**
**TEL: 065 - 2226486**

விலை - 12/=
ஆண்டு சந்தா : 190/=
ஆறுமாதச் சந்தா 100/=
(தபாற்செலவு உட்பட)


## உள்ளே


| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு | - | 01 |
| ஜீவ நதி ஊறும் கிணறு | - | 02 |
| அரசியான அன்னை மரியா | - | 03 |
| நிறைவுடன் வாழ்வோம் | - | 03 |
| முதல் அர்ப்பண தினம் | - | 04 |
| இலக்கிய மஞ்சரி | - | 05 |
| சிந்திக்கச் சிந்திக்க... | - | 06 |
| எனக்கும் கொஞ்சம் ... | - | 07 |
| நவீன ஓவியங்களின் பிரம்மா | - | 08 |
| மாணவர் பக்கம் | - | 10 |
| சுட்டால் போச்சு | - | 11 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 12 |
| இசையும் விடுதலையும் | - | 14 |
| குடும்பத்திற்கு நிகராக ... | - | 17 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 18 |
| மற்றவர்களின் ஒத்துழைப்பில்... | - | 19 |
| மனிதனைக் கொல்லும் | - | 20 |
| குடும்பம் ஒரு கோயில் | - | 21 |
| செபிக்கிறோம்! செபிக்கிறோம்! | - | 22 |
| விவிலியம் கற்போம் | - | 23 |
| அறிவை வளர்ப்போம் | - | 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புடன் உங்களோடு.....

ஆண்டுதோறும் மே மாதம் அன்னை மரியாவின் வணக்க மாதமாகக் கத்தோலிக்க திருச்சபையால் அனுசரிக்கப் படுகிறது.

ஈடிணையற்ற புனிதையாகக் கருதிப் போற்றப்படும் அன்னை மரியா எவராலும் நிரப்ப முடியாத தனி இடத்தைப் பெற்றவர்.

கடவுளோடு இரண்டறக் கலந்த வாழ்வு மரியாவி னுடையது. இறைமகனான இயேசுக்கிறிஸ்து அவர் வயிற்றில் கருவாகி உருவானதன் மூலம் ஊனோடு ஊனாக, உயிரோடு உயிராக ஒன்றித்துப்போனார்.

மரியாவின் தூய்மை, பக்தி, விசுவாசம், அர்ப்பணம், பிறரன்பு, தியாகம் போன்ற தெய்வீகப் பண்புகளின் அடித் தளத்தில் இறை உறவில் அவர் வளர்ந்து உயர்ந்து முதிர்ந்ததைக் காணமுடிகிறது.

அவருடைய வாழ்வு தனித்துவமானது: தெய்வீகத் தையும், மனிதத்தையும் ஒன்றிணைத்த ஊடகம் அவர். அந்த இணைப்பின் இலக்கணமும் அவரே. அந்த வகையில் உறவுக்கும் சமாதானத்துக்கும், விடுதலைக்கும் எடுத்துக்காட்டாக மரியா விளங்குகிறார்.

இன்று விடுதலை, சமாதானம், அமைதி பற்றிப் பேசும், அவாவிநிற்கும் நாம் மரியாவிடம் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய உண்டு. விடுதலை, அமைதி என்பது அன்பில், அர்ப் பணத்தில், தியாகத்தில்தான் உருவாக முடியும் என்பதை மரியா வின் வாழ்வு வலியுறுத்திக்கொண்டே இருக்கின்றது. விடுதலையை ஆயுதத்தால் அடைய முயல்வோருக்கும் அமைதியைத் தந்திரத்தால் உருவாக்க நினைப்போருக்கும் மரியாவின் வாழ்வு, அவரது பாதை என்றும் சவாலாகவே விளங்கும்.

**இணை ஆசிரியர்.**



*இறைவாக்கு*

**"நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்".**

*லூக்கா* 1/38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநீர் ஊறும் கிணறு.



வேதாகமத்தில் உன்னத சங்கீதம் 4:12–15 வரை வாசிக்கும்போது திருவசனம், ஒரு பெண்ணைக் குறித்து, "என் மணமகளே, பூட்டப் பட்ட தோட்டம் நீ, முத்திரையிடப்பட்ட நீரூற்று நீ, தோட்டத்தைச் செழிப்பிக்கும் நீரூற்று, உயிருள்ள நீர் சுரக்கும் கிணறு", என்றெல்லாம் சொல்கிறது.

ஆண்டவருக்குள் வாழ்கின்ற நமக்கு, ஜீவ நீரூற்று இயேசு என்று தெரியும். அரு 7:37ல், "யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும், என்னிலே விசுவாசம் கொள்பவன் குடிக்கட்டும்", என்று இயேசு சொன்னதை நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால் ஒரு பெண்ணும் ஜீவநீர் ஊறும் கிணறு அன்றோ? அவள் யார்? அதைக் குறித்துச் சற்றுப் பார்ப்போமே!

அரு 7:38–39 தம்மில் விசுவாசங் கொள்வோர் பெறப்போகும் ஆவியானவரைக் குறித்து, "உயிருள்ள நீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்" என்று பரிசுத்த ஆவியானவரைக் குறித்துச் சொல்கிறது. எனவே உயிருள்ள தண்ணீரான ஜீவநீர், ஊறும் கிணறு ஒரு பெண்மணி என்றால் அந்தப் பெண்மணியே அன்னைமரி!

இத்தகைய மகிமைமிக்க அன்னை மரியின் வயிற்றினுள்தான் ஜீவ நீராம் தூய ஆவியானவர் இறங்கினார். அவள் உதரத்தில் ஜீவப் பெருநீராக ஆவியானவர் பொங்கி எழுந்து இயேசுவாகவே உருவாகிவிட்டார். இயேசுவும் அங்கே ஊறிவரும் நீரைப்போல் உருவாகி வெளியாகிறார், அன்னைமரி இவ்வாறு ஜீவநீர் ஊறும் கிணறு ஆனாள்.

இந்த அன்னைமரிக்குள் தூய ஆவியும் இயேசுவும் அவர்களோடு தந்தையும் விஷேஷித்தவிதமாக தங்கி நிலைபெற்றதால்தான், அவள் இன்று விண்ணக மண்ணக இராக்கினியாக முடிசூட்டப்பெற்று உயர்த்தப் பெற்றுள்ளாள். அன்னைமரி விண்ணக மண்ணக இராக்கினியாக இருப்பதால் அவளது அதிகாரத்திற்குட்பட்ட இம்மண்ணுலகில் பாவத்தைத் தூண்டும் சாத்தானை தலைநசுக்க அதிகாரமும் பலமும் கொண்டவளாக இருக்கிறாள். தன் அதிகாரத்திற்குட்பட்ட மண்ணகத்தின் கள்வர்களை, அதாவது பிசாசுக்களை முறியடிக்க அன்னைமரி மண்ணில் இறங்கி வந்தாள். அவள் பரமதந்தையின் படைக்கலமாகையால் அவருக்கே வெற்றி நிச்சயம். லூர்த்து கெபி, பாத்திமா, வேளாங்கண்ணி, இங்கெல்லாம் இம்மண்ணில் அன்னைமரி தோன்றி உலகை நல்வழிப்படுத்திக் கொண்டிருக்கின்றாள். இறுதியில் மரியாயின் மாசற்ற இருதயத்தின் மூலமாக இவ்வுலகில் பூரண சமாதான யுகம் உருவாகும் என்று சொல்கிறாள்.

இத்தகைய ஜீவ நீரூறும் கிணறும் விண்ணக மண்ணக இராக்கினியுமான அன்னை மரியிடம் மன்றாடுவோர் எவரும் என்றுமே வீண் போனதில்லை. தேவனுக்கு அடுத்தபடியாக மகிமையின் உயர்விலே உயர்த்தப்பட்ட அன்னை மரியைத் துணையாகக் கொண்டோர் என்றுமே ஜீவனைப் பெற்றுக் கொள்கின்றனர். எனவே நாமும் நமது வல்லமையுள்ள அடைக்கலமும் காவலுமான விண்ணக மண்ணக இராக்கினியாம் அன்னை மரியாளை உயர்வுக்குத் துணையாகக் கொள்வோம். அவளில் ஊறிய ஜீவநீராம் இயேசுவும் நம்மிலே பொங்கிப் பாயும் வெள்ளமாக அவளில் நின்று வந்து நம்மை நிறைப்பார். நாமும் நலமுடன் வாழ்வுபெறுவோம்.

- லோப்பஸ் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியான அன்னை மரியா



பரமனின் திட்டமொன்று
பாவியெமை மீட்டிடவே
பணிந்தேற்றாள் மரியாளும்
பரிசுத்தா வியுறைய

மனுமீட்க இயேசுவுக்கு
மரியன்னை தாயானாள்
மாசில்லாக் கன்னியென்று
மாந்தர்நாம் போற்றுகிறோம்

இருளிலே விழுந்தவரை
இறைபாதம் சேர்ப்பதற்கு
இறைமகன் இயேசுவுக்கு
இறையன்னை துணைநின்றாள்

வாழ்விழந்த அனைவருக்கும்
வாழ்வுதரும் மங்கையவள்
வானவர் புடைசூழ
வான்மண் அரசியானாள்.

செபமாலை தந்துநாம்
செயம்காண வழிசொன்னாள்
செபம் எங்கள் வாழ்வானால்
சுபம் வாழ்வே, சொர்க்கம்தான்!

ஏஞ்சல் அவுஸ்கோன்
டச்பார்

## நிறைவுடன் வாழ்வோம்!

அறைகள் இல்லை அழகாய் வாழ-கொடுஞ்
சிறைகள் போலும் சிறிதாய் வீடு!
உறைய உகந்த இல்லிடம் தேவை!-செவி
உறைக்கச் சொல்வார் இங்குண்டு கோடி!

இறைத்துப் பணத்தைச் செலவுக் கிடினும்-ஈயா(து)
திறையாய்ப் பலரிடம் வேண்டிப் பெறினும்
முறையிலா வழியில் செல்வம் வரினும்-மாயா(து)
குறையே முடிவில் மனதில் யார்க்கும்!

துறைகள் பலவும் பயின்று பின்னால்-நிறையப்
பட்டம் - பதவி பகட்டாய் வரினும்
பிறையிற் களங்கம் கொண்டது போலும்-பல
குறைகள் காணும் நாளும் நம்வாழ்வும்!

மறைவை ஒட்டி மக்கள் கூடி - இழவுப்
பறையது முழங்கும் இறுதிநாள் வரையில்
கறையெனப் பற்றித் தொடர்ந்தே வருமே-பெருங்
குறைதான் மனதில் மானிடர் தமக்கே!!

நிறையது போற்றிப் புனிதமாய் வாழ-நல்ல
முறையது உண்டு முனிவரும் சொல்வார்
மறையது நாடி மயக்கம் போக்கி-வல்ல
இறையதை வேண்டி நிறைவுடன் வாழ்வோம்!

எஸ். ரஞ்சன் செல்வகுமார்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் அர்ப்பண தினம்



1963ம் வருடத்திற்குப் பின்னர், கத்தோலிக்க திருச்சபையில் பல மாற்றங்கள், பல புத்தெழுச்சிகள் ஏற்பட்டு வருவதை நாம் அனுபவித்து வருகின்றோம். இத்தகைய வரிசையில், வரலாற்றில் ஓர் ஏடாக, மகிழ்ச்சிக்குரிய விடயமாக வைகாசித் திங்கள் முதலாம் நாள் (01.05.2004) சனிக்கிழமை காலை 10.30 மணியளவில், மட்டக்களப்பு புனித வளனார் முதியோர் இல்ல ஆலயத்தில் ஒரு நிகழ்வு இடம்பெற்றது. அதாவது, அந்த இல்லத்தை இயக்கி வரும் ஏழைகளின் சிறிய சகோதரிகளுடன் ஒன்றிணைந்த ஜான் ஜுகான் சபையில் தம்மை இணைத்துப் பொது நிலையினரான செல்வி. ஆர். மற்றில்டா, திருவாளர்கள்: ஆர். ஜெயராஜ், ஜெஸ்லி பீற்றர்ஸ், ஜி. ரவிசங்கர், ஆர். ஜூட் ஆகிய ஐவரும் தமது முதல் அர்ப்பணத்தைத் திருகோணமலை -மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் முன் நிறைவேற்றிக்கொண்டனர். ஏழைகளின் சிறிய சகோதரிகளின் மேலாளர் அருட்சகோதரி: மரிய கிளேரட் இதற்கான ஒரு வருட ஆயத்தப் பயிற்சிகளையும், இரு நாள் ஞான ஒடுக்கத்தை அருட்தந்தை போல் சற்குணநாயகம் இயேசு சபை அடிகளாரும் வழங்கினர். இவர்களுக்கு இச்சபை மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றது. இத்துடன் தம்மைப்போன்ற பொதுநிலையினர் வருடா வருடம் இச்சபையில் இணைய முன்வருவதற்கும் அழைப்பு விடுக்கின்றது. "இதோ! என் உள்ளங்கைகளில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன்."

**தகவல்:**
*செல்வி: மற்றில்டா இராஜேந்திரம்,*
*ஜான் ஜுகான் சபை,*
*இல: 96, திருமலை வீதி,*
*மட்டக்களப்பு.*

## வாழ்த்துகின்றோம்! வேண்டுகின்றோம்!



திருகோணமலை-மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருள் தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை இம்மாதம் 7ம் திகதி (07.05.2004) தமது ஆயர் பணிவாழ்வில் இருபத்தியொரு ஆண்டுகளை நிறைவு செய்தார். ஆயர் அவர்களின் பணிவாழ்வு சிறக்க இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றோம்!

- தொண்டன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

- ஆழியோன் -

## "குடவோலை..."

அண்மைக்காலமாக இலங்கையிலும் இந்தியாவிலும் தேர்தல் நடவடிக்கைகள் உச்ச வேகம் அடைந்திருந்ததினை நாம் அனைவரும் அறிவோம். அதுமட்டுமல்ல அமெரிக்காவிலும் ஜனாதிபதி தேர்தல் சூடுபிடித்த நேரமும் கூட

நவீன காலத்தில் மட்டுமல்ல சோழர் காலத்திலும்கூட தேர்தல் முறைகள் இருந்தன என்பது வியத்தகு விடயமாகும். பல்லவர் காலத்தை அடுத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் காணப்படும் வரலாற்றுக் காலமே சோழர் காலம் எனப்படும். இக்காலம் கி.பி-9ஆம் - கி.பி 14ஆம் நூற்றாண்டு ஆகும். அதாவது விஜயாலயச் சோழன், முத்தரையரிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றுவது தொடக்கம் கி.பி 1310 ஆம் ஆண்டு இஸ்லாமியர் 2ம் பாண்டியப் பேரரசை வீழ்த்துவது வரையான காலம் இதனுள் அடங்கும்.

சோழர் காலத்தின் அரசியல் சிறப்புகளில் ஒன்று, நாடு ஒழுங்கான உள்ளூராட்சி நிர்வாக அமைப்பைப் பெற்றுக்கொண்டமை யாகும். ஒரு பிரமிட் அமைப்பில் நாடு நிர்வகிக் கப்பட்டது. கோபுர உச்சியில் மன்னனின் அதிகாரம் காணப்பட்டது. கீழே செல்லச்செல்ல அவருடைய அதிகாரம் பரவலாகச் சென்று சமூகம் முழுவதையும் செல்லக்கூடியவாறு நிர்வாக அமைப்புக் காணப்பட்டது. சாதிப் பிரிவினைகளும் அதன் அடிப்படையான தொழிற்பகுப்புகளும் உறுதிப் படுத்தப்பட்ட முறையில் வகுக்கப்பட்டிருந்தன. பேரரசின் நிர்வாகம் பின்வரும் படிமுறையமைப்பில் காணப்பட்டது.

மன்னன்
மண்டலங்கள்
வளநாடுகள்
நாடுகள்
சதுர்வேதி மரங்கள்
ஊர்கள்
சிற்றூர்கள்

இவற்றுள் சில நிர்வாகப் பிரிப்புகளுக்குரிய நிர்வாகிகள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். இம்முறை 'குடவோலை' எனப்பட்டது. எனினும் அனைவருக்கும் இதில் பங்கு பற்ற அனுமதியில்லை: உயர்சாதியினருக்கே 'குடவோலையில் சீட்டோலை பெற உரிமை வழங்கப்பட்டது எனத்தமிழாய்வாளர் சிலர் கூறுவர்.

தற்காலப்பொதுத்துறை அரசியல் மாணவர்களுக்கு நிர்வாகப் படிமுறைமை பற்றிய பாடங்களில் படிமுறை அமைப்புக்குச் சிறந்த உதாரணமாக இரண்டு சுட்டிக் காட்டப்படுகின்றது.

1. கத்தோலிக்கத் திருச்சபை
2. இராணுவம். - உலகில் சிறப்பான நிர்வாகப் படிமுறை அமைப்புக்குக் கத்தோலிக்கத் திருச்சபையே எடுத்துக்காட்டப்படுகின்றது. பாப்பரசர், ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினர், என்றவாறு இவ்வமைப்பு உலகில் முதன்மையான படி முறையமைப்பாகக் காணப்படுகின்றது. எனினும் சில அரசியல் ஆய்வாளர்களுக்கு இவ் உதாரணம் அவ்வளவு ஜீரணிக்கத்தக்கதாக இல்லை. இவர்கள் கத்தோலிக்கத் திருச்சபையை தவிர்த்து விட்டு எடுத்துக்காட்டுவார்.

### வெற்றிபெற..............

வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கை உள்ளவர்கள் தோற்றுவிடுவோம் என்ற எண்ணங்கொண்டவர்களைவிட சிறப்பாகச் செயலாற்றுகின்றனர்.

நீங்கள் செய்யும் காரியம் வெற்றிகரமாக நடப்பதாக மனதிற்குள் ஒத்திகை பார்த்துக்கொள்ளுங்கள். அவநம்பிக்கை கொள்ளவேண்டாம். நடக்கவிருக்கும் நிகழ்ச்சியை உங்கள் மனதுக்குள்ளேயே வெற்றிகரமாகக் கற்பனை செய்யுங்கள். இவ்விதமான வெற்றி ஒத்திகைகள் உங்கள் மனதில் அளவில்லாத தன்னம்பிக்கையை ஊற்றெடுக்கச்செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்கச் சிந்திக்க தித்திக்கும் பாடல்

நமது தேவாலயங்களில் எத்தனையோ பாடல்கள் பாடுகின்றனர். திருப்பலிக்காக, நற்கருணை ஆசிர்வாதத்திற்காக, வழிபாடுகளுக்காகப் பாடப் படுகின்றன. ஆனால் அவற்றுள் சிலபாடல்கள் நம் உள்ளத்தில் பக்தி நிலையை, பரவச நிலையை ஏற்படுத்தி நம்முள்ளத்தின் கவலைகளைத் தீர்ப்பனவாக அமைகின்றன. உதட்டளவில் இப்பாடல் நிற்காமல் உள்ளத்திலிருந்து புறப்படுமானால் அவை உண்மையில் நமது உணர்வுகளைத் தொடுகின்றன. அப்படியான பாடல்களில் 'யேசுவின் பொன் மொழிகள்' என்னும் பாடலும் சேர்க்கப்படல் வேண்டும். இப்பாடலை யார் இயற்றினாரோ எப்போது இயற்றினாரோ, ஏன் இயற்றினாரோ? எனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஆம், இப்பாடல் உள்ளத்தை ஊடுருவி, உணர்வுகளைத் தூண்டி நம் இரட்சகரின் போதனை களையே கூறி நிற்கின்றது. இப்பாடலை இயற்றியவரை இறைவன் உண்மையிலேயே ஆசீர் வதித்துள்ளார். இப்போது பாடலுக்கு வருவோம்.

*'யேசுவின் பொன் மொழிகள் என்*
*இதயத்தில் பாய்ந்ததம்மா-அவர்*
*ஆற்றிய அரும்பணிகள் நெஞ்சில்*
*அக்கினி மூட்டுதம்மா'*

அந்தப் பொன் மொழிகள் தான் எவை? இதோ தொடர்கிறது,

*'பகைவரை நேசி என்றார் - நெஞ்சில்*
*பாசத்தை வளர்த்திடென்றார்*
*இறைவனில் நிலைத்திரென்றார் - என்றும்*
*இரக்கத்தை வைத்திரென்றார்'*

இந்த நான்கு அடிகளுமே யேசுவின் ஆழமான அன்பை வெளிப்படுத்துகின்றன. முதன் முதலாகப் பகைவரை நேசி என்பதனால் ஒருவன் தன் பெற்றாரைச் சகோதரரை உறவினரை எப்போதும் நேசிப்பான்; அவர்களுக்க உதவி செய்வான்; உணவளிப்பான், உடையளிப்பான், ஆனால் பகைவருக்கு இவைகளைச் செய்யமாட்டான். இதனாலேயே செய்யவேண்டிய முக்கிய கடமையை முதல் அடிகளிலேயே கூறி விடுகிறார். அடுத்து யேசு செய்த நற்செய்கைகள் தொடர்கின்றன. இவை நாம் அறிந்தவை மட்டுமல்ல, அவை நாளாந்தம் கைக் கொண்டு வாழ்கின்றோம். ஆயினும் நாம் இறைவனில் நிலைத்திருக்கிறோமா? நம் நெஞ்சத்தில் கை வைத்துக் கூறுவோம். இறைவனை விட்டு நாம் பாவம் செய்து எத்தனை முறை பிரிந்திருக்கிறோம்.அவரில் நிலைத்திருந்தால், பிறருக்கு வேதனை தரும் செயல், சொல் நம்மிடமிருந்து வெளிவருமா? இறைவன் வாழும் உள்ளத்தில் இரக்கம் தானாக உதிக்குமல்லவா? இதுமட்டுமா, இறைமகன் யேசுவின் நற்செய்கைகள் வரிசையாய் வருகின்றன. பசித்தவரின் பசியை ஆற்றினார். பன்னிரண்டு அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்களுக்களித்தார். குருடருக்குப் பார்வை, செவிடருக்குக் கேள்வி, குற்றம் புரிந்தவர்க்கு மன்னிப்பு அளித்ததையும் நாம் நம்மை எப்படி எப்படி வைத்திருக்க வேண்டுமென்றும் கூறினார். எந்த நேரம் மனுமகன் வருவாரென அறியோம். பத்துக் கன்னியரின் உவமை மூலம் இறைவனில் விழித்திரு எனக் கூறினார். இன்னும் துன்பம் வரும்போது பொறுமை யாய் இரு என்றும் உள்ளத்தூய்மையாய் இருக்கும்படியும் கூறினாரல்லவா? பாத்திரங்களை வெளியே மினுக்காமல் உளேயும் மினுக்குதல் அவசியம். அது மட்டுமல்ல நீங்கள் துன்பத்தில் களித்திருங்கள் 'துன்பப்படுவோரே நீங்கள் பேறுபெற்றவர்கள். ஏனெனில்ஆறுதலடைவீர்கள்' என்று கூறினாரல்லவா? இப்பாடல் யேசுவின் போதனைகளை அப்படியே எடுத்துச் சொல்வதை நாம் அறியமுடியும். எனவே இப்பாடலை இயற்றியவர் உண்மையிலேயே யேசுவின் போதனைகளையும் சாதனைகளையம் இந்த ஒரே பாடலில் இணைத்து ள்ளார். எனவே இப்பாடல் நம் வீடுகளிலும் தேவால யங்களிலும் அடிக்கடி பாடப் பட வேண்டிய ஒரு பாடல் என்பது புரிகிறதல்லவா? எனவே சிந்திக்கச் சிந்திக்கத் தித்திக்கும் பாடலிது என நான் கூறுவது சரியா? பிழையா? வாசக நெஞ்சங்களே நீங்களே தீர்ப்பிடுங்கள்!

றோஸ் ஜோசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:-

இயேசுவின் பொன்மொழிகள் என்ற பாடல் 1975ம் ஆண்டு இயற்றப்பட்டது. இதனை இயற்றி இசையமைத்தவர் தொண்டன் இணை ஆசிரியர் மலர்வேந்தன். இது அதே ஆண்டு 'இதய ஒலி' பாடல் புத்தகத்தில் வெளியிடப்பட்டது. 1976ம் ஆண்டு 'கண்மணி ஆடவா' புகழ் காலஞ்சென்ற G.F. லோப்பஸ், பிளசிடா ஆகியோரது குரலில் இப்பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டு வானொலியில் ஒலிபரப்பானது. பின்பு 1984ம் ஆண்டு கொச்சிக் கடை புனித அந்தோனியார் ஆலயத்தால் வெளியிடப்பட்ட இசைநாடாவில் மலர்வேந்தன் குரலில் இப்பாடல் இடம் பெற்றது. தற்போது தமிழ் நாட்டின் புகழ் பெற்ற பாடகர் கிருஷ்ணராஜ் அவர்களினால் பாடப்பட்டு C.D இசைத்தட்டில் வெளிவர விருக்கிறது. இந்த இசைத்தட்டை இலங்கையின் புகழ்பெற்ற கிறிஸ்தவ இசையமைப்பாளர் திரு. A.J பொஸ்கோ தயாரிக்கின்றார். மேலும் இப்பாடல் இயற்றப்பட்ட காலத்திலேயே அறிமுகமான மற்றுமொரு புகழ்பெற்ற பாடலான 'பாடுகளின் பாதையிலே தேவமகன் ஊர்வலமோ' என்ற பாடலையும் இயற்றி இசையமைத்தவர் மலர்வேந்தன் என்பதும் இது இலங்கைக் கல்வி திணைக்களத்தால் வெளியிடப்படும் கத்தோலிக்க சமயப்பாடப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## சர்வதேசக் குறியீடுகள்

| | |
|---|---|
| ஒலிவ மரத்தின் இலை | - சமாதானம் |
| புறா | - சமாதானம் |
| வெள்ளைக் கொடி | - சமாதானம் |
| அரைக்கம்பத்தில் கொடி | - இரங்கல் |
| தலைகீழான கொடி | - துன்பம் |
| கையில் தராசு கண்கட்டிய பெண் | - நீதி |
| கறுப்புக் கொடி | - எதிர்ப்பு |
| செம்பிறை | - அரபு நாடுகளில் செஞ்சிலுவைச் சங்கம் |
| சிவப்பு விளக்கு | - ஆபத்து, மருத்துவமனை, விபத்து |

யேசுதாசன் பிரதீபன்,
பிரதான வீதி,
கல்குடா.

# எனக்கும் கொஞ்சம் சோகம் வேண்டும்

சோகத்தில் ஒரு சுகமுண்டு, சுவையுண்டு. பிரச்சினைகள் வரும் போது ஓடிய கால் நின்று ஒரு நிலையாய் மனம் குவிந்து சீராகும். இதுநாள் தேடிய நண்பனும், எதிரியும் தெளிவாகும். நேர்கோட்டில் போகும் நிர்ணயித்த வாழ்க்கையை நிறுத்தி வைக்கும். கடிவாளக் குதிரை கண்ணைச் சுழற்றிப் பார்க்கும் இறந்த, நிகழ், எதிர் காலங்கள் அலசி ஆராயப்படும். பிரச்சினைகளே இல்லாத போது பயம் வரும் .....

பெரிதாய் என்ன வருமோ என்று, தினசரி உணவு செரிப்பதற்கு விரதம் தினசரி நடைமுறை சரிப்படுத்த சோகம் நிழலைப் போல... சோகம் நம்மோடு இணைந்தே இருக்கும், இரவுகளுக்குப் பின் பகலாய், சோகத்திற்குப் பின் சுகத்தை மனம் எதிர்நோக்கும். குளிர் கால வெயிலாய், அவ்வப்போது தேவை சோகம், வாழ்க்கையில், புயலுக்குப் பின் அமைதியாய், சோகத்திற்குப் பின் மனம் நிதானம் காக்கும். அலசி ஆராய்ந்து முடிவு எடுக்கும். பழைய சோகம் நினைத்து பரிதவிக்கும் அனுபவத்தில் பாடம் கற்கும். திரும்பத் தவறு நேராமல் தடுக்கும்,வாழ்க்கையை உணர்த்தும், இந்தச் சோகம் எனக்குப் பிடிக்கும், நிதானம் உணர்த்தும் இந்தச்சோகம், எனக்கு வேண்டும் அவ்வப்போது என்னை உணர்த்த.....

செல்வன். S. சஞ்சீவ்ராஜ்
வாழைச்சேனை.

## அனைத்துலக ஆயர் மன்றம்

அனைத்துலக ஆயர் மன்றத்தின் கூட்டம் 2005ம் ஆண்டு ஒக்ரோபர் 2ம் திகதி முதல் 29 வரை நடைபெறும் என வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த ஆயர் மன்ற அமர்வுக்கான கருப்பொருளாக நற்கருணை எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. பணிவாழ்வுக்கும் தனிவாழ்வுக்கும் உரமும் உச்சமுமாக இருப்பது நற்கருணைதான் என்றும் இதையே 11வது அனைத்துலக ஆயர் மன்ற அமர்வில் சிந்திக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உங்களுக்குத் தெரிந்த ஓவியர் ஒருவரின் பெயரைச் சொல்லுங்கள்' என்று யாரைக் கேட்டாலும் பெரும்பாலானவர்கள் முதலில் குறிப்பிடும் பெயர் பிக்காசோ!

பிக்காசோவின் உலகம் தழுவிய புகழுக்கு என்ன காரணம்? ஆரம்ப காலங்களில் ஓவியங்களை அகலம் - நீளம் என்ற எல்லைக்குள் மட்டும் - அதாவது Two Dimension - ல் மட்டுமே வரைந்து கொண்டிருந்தார்கள். மைக்கல் ஆஞ்சலோவும், லியனார்டோ டாவின்சியும் ஓவியங்களுக்கு ஆழங்கொடுத்து Three Demension - எஃபெக்ட் கொடுக்க ஓவியக்கலை மிகப் பெரிய மாற்றம் அடைந்தது. இவர்கள் வாழ்ந்து மறைந்து பல நூற்றாண்டு ஆன பிறகும் ஓவியக்கலைக்கு யாராலுமே ஒரு புதிய திருப்பத்தைக் கொடுக்க முடியவில்லை. இன்னொரு புறம் கெமராவின் வருகை ஓவியங்களின் முக்கியத்துவத்தைக் குறைக்க ஆரம்பித்தது. ஓவியர்கள் தாங்கள் பார்க்கும் காட்சிகளை என்னதான் தத்ரூபமாக வரைந்தாலும் போட்டோவின் வேகத்திற்கும் தரத்துக்கும் அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. ஓவியக்கலை தனது முக்கியத்துவத்தை இழந்து விடுமோ என்ற அச்சம் முளைவிட ஆரம்பித்தது. அந்தச் சமயம், அதாவது 1907ம் ஆண்டு பிக்காசோ வரைந்த Les Demoisellesd' Auignon என்ற ஐந்து பெண்களின் ஓவியம் ஓவியக்கலைக்கு ஒரு மிகப்பெரிய திருப்பு முனையைக் கொடுத்தது.

# நவீன ஓவியங்களின் பிரம்மா



'ஒரு காட்சியைக் கண்கள் எப்படிப் பார்க்கின்றதோ, அதை அதே மாதிரி வரைவதில் என்ன புதுமை இருக்கிறது? அந்தக் காட்சி மனதில் ஏற்படுத்தும் உணர்ச்சிகளைத்தான் ஓவியம் பிரதி பலிக்கவேண்டும், - இது பிக்காசோவின் கருத்து. இந்த அடிப்படையிலேயே அவர் ஓவியங்களை வரைந்தார்.

பிக்காசோவின் இந்தப் புதிய முயற்சியை உலகம் எடுத்த எடுப்பிலேயே சிவப்புக் கம்பளம் விரித்து ஏற்றுக்கொள்ளவில்லை. பலமான எதிர்ப்புக் கிளம்பியது. அதே அளவுக்கு ஆதரவுக் கைத் தட்டல்களும் எழுந்தன. கம்பரின் பாடல்களுக்கு ஆள் ஆளுக்கு ஓர் அர்த்தம் சொல்வதைப்போல பிக்காசோவின் இந்த ஓவியத்தைப் பாராட்டியவர்கள் ஒவ்வொருவரும் ஒரு புது அர்த்தம் சொன்னார்கள். அப்போது பிக்காசோ சொன்னார் "எந்த ஓவியமாக இருந்தாலும் சரி, அதற்கு ஒரே அர்த்தம்தான் உண்டு. அந்த அர்த்தம் அதை வரைந்த ஓவியன் கொடுத்த அர்த்தம் மட்டுமே." பிக்காசோ இதே பாணியில் தொடர்ந்து ஓவியங்கள் வரைய.... உலகம் இந்த ஓவிய முறைக்கு Cubism என்று பெயர் கொடுத்தது. ஜியோ மெண்டரியின் கோட்பாடுகளைப் பிரதிபலிக்கும் இந்த ஓவியக்கலை பின்பு ரொக்கட் வேகத்தில் வளர்ந்தது.

கடந்த நூற்றாண்டின் வியக்கத்தக்க விஞ்ஞானியான ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், பிக்காசோவின் இரசிகராக மாறினார்.

பிக்காசோ அறிமுகப்படுத்திய இந்த ஓவியமுறை காகிதத்தோடு நின்றுவிடவில்லை. பிற்காலத்தில் டி.வி., ஃபிரிஜ், வாட்டர் ஹீட்டர் போன்ற பல பொருட்களை டிசைன் செய்வதற்கு இதுதான் அடிப்படையாக இருந்தது.

கியூபிசம் என்ற மொடர்ன் ஆர்ட்தான் பிக்காசோவுக்கு புகழ் சேர்த்தது என்றாலும் மரபு ஓவியங்களை வரைவதிலும் பிக்காசோ வல்ல வராக விளங்கினார். அதுமட்டுமல்ல ஓவியர் வான்கா ஆரம்பித்து வைத்த Expressionism-ல் ஆரம்பித்து Surrealism வரை அத்தனை வகைகளிலும் இவர் நிபுணர். சிற்பம், செராமிக்ஸ், நாடக மேடை டிசைன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்னிகா



என்று ஆரம்பித்து நாடக நடிகர்களுக்கான ஆடைகள் வரை அவர் பல விடயங்களைச் செய்வதில் கை தேர்ந்தவர்.

பிக்காசோ பிறந்தது ஸ்பெயின் நாட்டில் என்றாலும் அவர் வாழ்க்கையின் பெரும் பகுதியைச் செலவிட்டது கலைகளின் தலை நகரான பாரீசில்! தனது குடிமகனாக மாறச் சொல்லி பிரான்ஸ் பல முறை பிக்காசோவைக் கேட்டுக்கொண்டது. ஆனால் தனது நாட்டின் மீது கொண்ட பற்றால் கடைசிவரை அவர் தனது குடியுரிமையை மாற்றிக்கொள்ளவில்லை

1937ம் ஆண்டு! இரண்டாம் உலகப்போர் அசுர வேகத்தில் நெருங்கிக்கொண்டிருந்த சமயம்.

சின்ன வயதில் ஓவியனாக வேண்டும் என்ற கனவுகளோடு வளர்ந்த ஹிட்லர்... இது என்ன மொடர்ன் ஆர்ட்? பைத்தியக்காரன் கிறுக்கிய மாதிரி இருக்கிறது..! என்று பிக்காசோவின் ஓவியங்களைத் தடை செய்தார்.

இன்னொரு பக்கம் பிக்காசோவின் தாய் நாடான ஸ்பெயின் நாட்டில் உள்நாட்டுப் போர் மூள.... இடையிலே மூக்கை நுழைத்த ஹிட்லர் ஸ்பெயின் நாட்டின் கார்னிகா நகர் மீது குண்டு மழை பொழிந்தார். இதில் அந்நகரின் அத்தனை கட்டடங்களும் செங்கல் குவியலாக மாறின. மனிதர்கள் அத்தனைபேரும் பிரேதங்களானார்கள். அந்நகரைச் சுற்றி மரண ஓலம் கேட்டபடியே இருந்தது.

தன் தாய்நாட்டின் வேதனையை பிக்காசோ கான்வாஸ் துணிக்கு இடம் பெயர்த்தார். இறந்து போனவர்களுக்காகத் தீட்டப்பட்ட அந்த ஓவியம் இறவாப் புகழ் பெற்றது. பிறகு ஹிட்லரின் நாஜியிசத்தை எதிர்க்கும் சின்னமாகவே அந்த ஓவியம் மாறியது.

இரண்டாம் உலகப்போர் முடிவை நோக்கி நெருங்கிக்கொண்டிருந்த சமயம் பிக்காசோ பிரான்ஸ் நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்.

அமைதி சம்பந்தமாக அந்த கட்சி நடத்திய பல சர்வதேசக் கூட்டங்களில் கலந்து கொண்டார். 1950ம் ஆண்டு நடத்தப்பட்ட அமைதி மாநாட்டுக்காக அவர் அமைதியைப் புறாவாக உருவகப்படுத்தி ஓர் அடையாள ஓவியம் உருவாக்க...அதை மொத்த உலகமும் ஏற்றுக் கொண்டது.

- நன்றி. வாவ் 2000-

## இணையத்தளத்தில் திருத்தந்தை பற்றிய விபரங்கள்



வத்திக்கான் இணையத் தளத்தில் திருத்தந்தை பற்றிய வெளியீடுகள் இடம் பெற்றுள்ளன. கடந்த ஏழு வருடங்களுக்கு முன்பு திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் நாளாந்த செயல்முறைகளை உரோமையில் வாழ்ந்தவர்களால் மட்டுமே அறிய முடிந்தது. ஆனால் இப்பொழுது அநேகமான அறிவிப்புகளை இணையத் தளத்தில் பெறக்கூடியதாக உள்ளது. திருத்தந்தையின் இணைய அறிவிப்பின்படி வத்திக்கானின் வெப்தளம் திருத்தந்தையினதும், அவரது இடமாகிய வத்திக்கான் நகரினதும் செயற்பாடுகளை அறிவிக்கும் பிரதான காரணியாக உள்ளது.www.vatican.v.A என்ற முகவரியைக் கொண்ட இந்த இணையத்தி லிருந்து 2003ம் ஆண்டு கிட்டத்தட்ட 22 மில்லியன் அறிவிப்புக்கள் வெளிவந்தன என்றும் அவற்றில் சராசரி 59, 667 விடயங்கள் தினமும் தேடப்பட்டன என்றும் திருத்தந்தையின் இணையத்தளம் அறிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வேதாகமம் சென்ற இதழ் தொடர்ச்சி ....**

**ஆசிரியத்துவமும் இறையூக்கமும்**

வேதாகமமானது இறைவனுடைய வார்த்தைகளைக் கொண்டுள்ள நூலாகும். இருப்பினும் அவரே அதனை எழுதவில்லை, அல்லாஹ் கூறக்கூற முகமதுநபியவர்கள் குர்ஆனை எழுதியது போல் இறைவன் கூற மனிதன் வேதாகமத்தை எழுதவில்லை. மாறாக அவர் வெளிப்படுத்திய மறையுண்மைகள் மனிதனால் காலம் காலமாக பற்பல விதமாக தலைமுறைகளுக்குக் கையளிக்கப்பட்டு வந்தன. இவ்வெளிப்பாடுகள் அனைத்தும் மனிதனுக்குக் கிடைக்க வேண்டும் என்று விரும்பிய இறைவன் அதற்கு எழுத்து வடிவம் கொடுக்கச் சித்தமானார். இதற்கு மனித எழுத்தாளர்களைப் பயன் படுத்தினார். இவ்வெழுத்தாளர்களையும், அவர்களை இறைவன் பயன்படுத்திய முறையையும் அறிய இன்று நாம் வாசிக்கும் வேதாகமத்தை விளங்கிக் கொள்வது அவசியமானதாகும்.

**ஆசிரியத்துவம்**

இவ்வாசிரியத்துவம் பற்றி முதலாம் வத்திக்கான் சங்கம் குறிப்பிடுகையில் இது தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது எனவும் திருத்தந்தை 13ம் சிங்கராயர் இதுபற்றிக் குறிப் பிடுகையில் தூய ஆவியின் ஏவுதலால் எழுதப் பட்ட இந்நூலுக்கு கடவுளே ஆசிரியர் எனக் கூறி மனிதர்களை எழுதும் படி கருவிகளாய்ப் பயன்படுத்தியதாகவும், தமது இறைவல்ல மையால் எழுதத் தூண்டியதாகவும், அவற்றை அவர்கள் முறையாக உணர்ந்து, தகுந்த சொற் களைக் கொண்டு, வழுவா உண்மையோடு அவற்றை எழுத அவர்களுக்கு உதவியதாய்க் கூறுகின்றார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கமும் இதன் வெளிப்பாட்டு உண்மைகள் தூய ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டதாய்க் கூறுகின்றது. எனவே இறை ஏவுதலால் எழுதப்பட்ட வேதா கமமானது போதிப்பதற்கும், கற்பிப்பதற்கும், திருத்துவதற்கும் நீதிநெறியில் நடத் துவதற்கும் பிரயோசனமாய் உள்ளது. இறைவாக்கானது எக்காலத்திலும் மனிதனுடைய மன எண்ணங்கள் அல்ல. (2திமோ 3:16) இறைவனின் பரிசுத்த மக்களாய் ஆவியால் ஏவப்பட்டே பேசினார்கள். (2பேருது 1:21) இவைகளின் மூலம் இறைவனே வேதாகமத்தின் ஆசிரியர் என்பது கூறப்படுகிறது.

இறைவன் தானாக வேதாகமத்தை எழுதாமல் மனிதனை ஆசிரியராகக் கொண்டு எழுதியதால் மனித எழுத்தாளர் தனது திறன் ஆற்றல், மொழி, கற்பனா சக்தி, அனுபவங் கள் போன்றவற்றைப் பயன்படுத்தி, அக்கால பாமர மக்களும் விளங்கிக் கொள்ளும் வகை யில் கதைகள் மூலம் இறைவனது எண்ணங் களை வெளிப்படுத்தி எழுதியுள்ளார். எனவே வேதாகமத்திற்கு இரு ஆசிரியர்கள் உண்டு. இறையுண்மைகளை வெளிப்படுத்திய இறைவன் மூல ஆசிரியராகவும், இறை சித் தத்திற்குக் கீழ்ப்படிந்து எழுத்தில் வடித்த மனிதன் துணை ஆசிரியராகவும் காணப் படுகின்றனர். ஆயினும் இறைவன் மூல ஆசிரியராய் இருப்பதால் இவற்றில் உள்ள பல விடயங்கள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையதாயக் காணப்படுகின்றது. (உ+ம்) அக்காலத்தில் நிலவிய உலக அமைப்பு பற்றிய எண்ணங்கள். எனவே இவற்றை சரிவர விளங்கிக் கொள்ள நாம் இரு ஆசிரியர்களுக்குமிடையேயான தொடர்புகளை அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு இறையூக்கத்தை முதலில் விளங்கிக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

## இறையூக்கம்

வேதாகமத்தில் காணப்படும் நூல்களை எழுத இறைவன் தான் பயன்படுத்திய மனித ஆசிரியர்களுக்கு விசேட அருள் அளித்தார். இறைவன் பல்வேறு காலகட்டங்களிலே, பற்பல விதமாக வெளிப்படுத்தி தலைமுறை தலை முறையாகப் பேசப்பட்ட இறைவெளிபாட்டு உண்மைகளைச் சேகரித்து, தரம் பிரித்து, அவர் விரும்பியதைத் தேர்ந்தெடுத்து, விரும்பியவாறு எழுத, இறைவன் மனிதனுக்குக் கொடுத்த அருள், இறையூக்கம் எனப்படும். இவைகளை அவர்கள் செய்து முடிக்கும் வரை இறைவன் அவர்களோடு இருந்து ஊக்கமளித்து, மனித ஆசிரியர் அறியவும், அறிந்தவற்றை எழுத விரும்பவும், விரும்பியவற்றை வழுவா உண்மையுடனும், பிரமாணிக்கத்துடனும் எழுதவும் அவர்களுக்கு உந்து சக்தியாக இருந்தார்.

இறைவன் மனித எழுத்தாளர்களை, அவர்களது அறிவு, ஆற்றல், அனுபவம், மனம், கற்பனாசக்தி, ஆகியவற்றிற்கு மதிப்பளித்துப் பயன்படுத்தினார். எனவே அவர்கள் தமது விருப்பு, வெறுப்பு, அகக் காரணங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி எழுதினார்கள். எனவேதான் வேதாகமத்திலே உள்ள வெவ்வேறு நூல்களில் அதை எழுதிய ஆசிரியரின் தன்மை, சிறப்பு, பண்பு, பண்பாடு, இலக்கிய நடை போன்றவற்றையும் காண முடிகின்றது. இதனை ஆய்ந்தறிந்து இறை யுணர்மைகளைத் தேடுவதற்கு வேதாகம நூலைப் புரிந்து கொள்வது அவசியமானதாகும்.

# சுட்டால் போச்சு!

வெளி நாடு சென்று நீ திரும்பினாலும்
வீடு வயல் பூமியென்று தேடினாலும்
பழி சுமைக்குப் பயந்து தெய்வக் கோயில் கட்டி
பகலிரவாய்ப் பூசையிட்டுப் கும்பிட்டாலும்
ஒளிமயமாய் வாழ்ந்திடத்தான் திட்டமிட்டு
ஒன்றுபத்தாய் ஊதியத்தை வளர்த்திட்டாலும்,
வழிப்பயணம் போகையிலே ஒருநாள் உன்னை
"வா" வென்று இடைமறித்து சுட்டால் போச்சு!

இணக்கமுடன் உறவினரை அழைத்து வீட்டில்
இஷ்டம் போல் விருந்து வைத்து மகிழ்ந்திட்டாலும்
பணப்புளக்கம் இருந்தாலும் பயத்தால் வாழ்க்கை
பாதையினைத் திட்டமிட்டு சுருக்கினாலும்
இனக்கலகம் வந்திடுமோ என்று அஞ்சி
இருந்த இடம் மாறி எங்கும் ஓடினாலும்
குணப்பெருமை அறியாதார் ஒருநாள் வந்து
குண்டடிக்கும் போதினிலே பட்டால் போச்சு!

மந்திரியாய் இருந்தாலும் மதிப்பு வாய்ந்த
மன்னவனேயானாலும் காவல்போட்டு
இந்திரன்போல் வாழ்ந்தாலும் முடியாதப்பா
இயந்திரக் கைத்துப்பாக்கி வந்தே தீரும்!
சுந்தரத் தேரூர்ந்தவனும் சொகுசு வாழ்க்கை
சுதந்திரமாய் வாழ்ந்தவனும் என்றோ ஓர் நாள்
சந்தியிலே மந்தைகள் போல் கிடக்கக் கண்டோம் !
தனிமரம் போல் வாழுவதே நல்லதையா!

**- என். கே. தயாள குணசீலன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு.ஜே.எஸ்.வசந்தன் அவர்களுடன்

# தொண்டனின் சில நிமிடங்கள்...



*மட்டக்களப்பு மாவட்டம் டெனிஸ் விளையாட்டில் சில சகாப்தங்களுக்கு முன் சிறப்புற்று இருந்தது. ஆனால் காலப்போக்கில் மெல்ல மெல்ல சிறப்பொழிந்து போயிற்று. ஆனால் 1990ம் ஆண்டின் பின் இவ்விளையாட்டு மீண்டும் புத்துயிர்பெறத்தொடங்கி விட்டது. இதற்குக் காரணமாய் இருந்தவர் திரு. ஜே. எஸ். வசந்தன் அவர்கள் ஆவார். இவர் மட்/புனித மிக்கேல் தேசிய பாடசாலையில் விளையாட்டுத்துறை ஆசிரியராகப் பணிபுரிகின்றார். அத்துடன் இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தின் (SLTA) அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளரும் ஆவார். இவரால் பயற்றுவிக்கப்பட்ட வீரர்களே இன்று இலங்கையின் டெனிஸ் தர வரிசையில் 1ம், 2ம், தரங்களில் உள்ளார்கள். அவர்கள் இலங்கை தேசிய டெனிஸ் குழுவில் உள்ளதால் வெளிநாடுகளில் இலங்கைக்காக விளையாடுகின்றார்கள்.*

*எனவே இம்முறை* **திரு.ஜே.எஸ். வசந்தன்** *அவர்களைத் தொண்டனுக்காகச் சந்தித்தோம்.*

☞ **உங்களுக்கு விளையாட்டுத்துறையில் ஈடுபாடு வரக் காரணம் என்ன?**

☺ நான் பாடசாலை நாட்களில் கூடைப்பந்தாட்டத்தில் அதிகம் ஈடுபாடுகாட்டினேன். தேசிய ரீதியில் 'சம்பியன்' பட்டத்தைப் பெற்றுள்ளேன். பின்னர் விளையாட்டுத்துறை ஆசிரியராக 1989ல் நியமனம் பெற்றேன். அப்படியே விளையாட்டுத் துறையில் ஈடுபாடு ஏற்பட்டது.

☞ **கூடைப்பந்தாட்ட வீரரான நீங்கள் எப்படி டென்னிஸ் விளையாட்டில் கவரப்பட்டீர்கள்?**

☺ 1990ம் ஆண்டு டென்னிஸ் விளையாடத் தொடங்கினேன். எங்களுக்கென்று ஒரு பயிற்றுவிப்பாளர் இல்லை. எங்களுக்கு தெரிந்தமாதிரி விளையாடினோம். 1992ம் ஆண்டு பயிற்றுவிப்பாளர் பாசறையில் பங்கு பற்றினேன். 1993ம் ஆண்டில் புனித மிக்கேல் கல்லூரி டென்னிஸ் கிளப்'ஐ ஆரம்பித்தோம். இதற்காக நான்கு டென்னிஸ் திடல்களை நிறுவினோம். 1994ம் ஆண்டில் இருந்து கொழும்பு உட்பட நாட்டின் எல்லாப் பாகங்களிலும் எமது வீரர்கள் சாதனை புரிந்து வருகின்றார்கள். திரு.அன்டன் பட்டா திசவீரசிங்கம், அருட்பணி.போல் சற்குணநாயகம் (S.J.), ஆகியோர் எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்து வருகின்றார்கள்.

☞ **உங்கள் பணியில் நீங்கள் சாதித்தவை பற்றி....?**

☺ எமது வீரர்கள் இலங்கைக்கான அணியில் விளையாடுகிறார்கள். தற்போது சுமார் பத்துக்கும் மேற்பட்ட நாடுகளில் அவர்கள் விளையாடுகிறார்கள். அவர்களில் ஒருவர் தரவரிசையில் ஆசியாவில் நான்காம் இடத்திலும் இன்னொருவர் ஒன்பதாம் இடத்திலும் உள்ளார்.

☞ **உங்கள் பணியில் நீங்கள் சந்திக்கும் சவால்கள் பற்றி....?**

☺ எமது பாடசாலை வீரர்கள் பெரும்பாலும் மட்/புனித மிக்கேல் கல்லூரி மாணவர்கள். அவர்களில் திறமையானோரை இனம் கண்டு கொழும்பின் பிரபல பாடசாலைகள் கபளீகரம் செய்து விடுகின்றன. அவர்களுக்கு இலவச பாடசாலை அனுமதி, இலவச விடுதி வசதி, இலவச உணவு வசதி, இலவச பயிற்சிகள், உபகரணங்கள் எல்லாம் கொடுக்கின்றன. எனவே மாணவர்கள் அவர்கள்பால் கவரப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தவிர பலவேறு இடங்களுக்கும் வீரர்களை அழைத்துச் செல்வதற்கான வாகன வசதியின்மை, தங்குமிடமின்மை, போசாக்குணவுப் பிரச்சினை என்பனவும் பெரும்சவால்களாகும்.

☞ **வேறு ஏதும் கூற விரும்புகிறீர்களா...?**

☺ இலங்கையின் பிரபல பாடசாலைகளின் டெனிஸ் பயிற்றுவிப்பாளர்கள் அனைவருமே புனித/மிக்கேல் கல்லூரியின்புதல்வர்களே! அத்துடன் இவ்விளையாட்டானது எவ்வயதிலும் விளையாடக்கூடிய விளையாட்டாகும்.

தொண்டன் சார்பில் நன்றியும் வாழ்த்துக்களும் கூறி விடை பெற்றோம்.

**- ஆழியோன் -**

## வியட்நாமில் கிறிஸ்தவர்கள்

[illegible]

சுதந்திர மத வழிபாட்டிற்கு அனுமதிவேண்டி வியட்நாமில் நான்கு இலட்சம் கிறிஸ்தவர்கள் அந்நாட்டு பல்வேறு நகரங்களில் அமைதி ஊர்வலம் நடத்தியபோது இடம்பெற்ற அரச அடக்கு முறைகளால் 400 கிறிஸ்தவர்கள் வரை உயிர் இழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. அண்மையில் வியட்நாம் அரசால் எடுக்கப்பட்ட இந்த அடக்குமுறைத் தாக்குதலில் துப்பாக்கியால் சுட்டும், கம்புகளால் தாக்கியும், கல்லால் எறிந்தும் 400 கிறீஸ்தவர்கள் வரை கொல்லப்பட்டுள்ள நிலையில் பலர் எலும்பு முறிவுகளுக்கும் உள்ளாகியுள்ளனர். அரசின் இத்தகைய நடவடிக்கைகளால் கிறீஸ்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் அகதிகளாக மாறும் அபாயம் இருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

## முதலாம் வருட நினைவஞ்சலி

**அன்னை மடியில்**
**27 - 07 - 1936**



**ஆண்டவர் மடியில**
**16 - 05 - 2003**

### திருமதி. பிலோமினா மணிக்குமார்

மறைந்து போன அத்தியாயத்தின் அன்பு
நினைவுகளை கண்ணீரால் காணிக்கையாக்குகிறோம்
ஓராண்டு சென்றாலும் உங்கள் அன்பின்
நினைவுகள் நிழலாகத் தொடர்கின்றன

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்
டி.எம். குமார் (கணவர்) கிறிஸ்ரி ரஞ்சித் (மகன்)
கீதாஞ்சலி ரஞ்சித் (மருமகள்) மிதுஷாலினி ரஞ்சித் (பேத்தி)
உறவினர்கள், நண்பர்கள்

3, அதிகார் வீதி, மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையும், விடுதலையும்

- சு. கவிநேசன் சாலமோன் -

இறைவனின் அருட்கொடைகளில் இசை முக்கியமானது. அது குணமாக்கும் தன்மையையும் விடுதலை தரக்கூடிய தன்மையையும் உடையது.

சமுதாயத்தில் நம்முடைய பணியில் இசையின் பங்கு பெரிது, அது முக்கியமான பங்கை வகிக்கின்றது.

'இசை' என்ற சொல்லுக்கு இசைய வைப்பது அல்லது இணைய வைப்பது அல்லது உணர்வுகளைத் தூண்டக்கூடியது என்று பல பொருள்கள் உள்ளன. இசை அனைத்து உயிரினங்களுக்கும் எளிதில் புரியக்கூடிய ஒரே தெய்வீக மொழி. இசை மனிதர்களை இயற்கை யோடும், இறைவனோடும் இணைக்கும் ஒரு தொடர்பியல் கருவி. இசை உயிரினங்கள் அனைத்திற்கும் நன்மையையும் விடுதலையையும் தரக்கூடியது.

எடுத்துக்காட்டாக. 1970-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தாவரவியல் துறையில் நடந்த ஆராய்ச்சியில் இசையைக் கேட்டுச் செடிகள் வளருகின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் அந்தச் செடியில் விளையும் கனிகள் சுவையாகவும் இருக்கின்றன என்பதும் அந்த ஆராய்ச்சி கூறும் உண்மையாகும்.

அக்பர் காலத்தில் அரண்மனையிலிருந்த பட்டத்து யானைக்கு மதம் பிடித்தது. அதை அடக்கு வதற்கு அரண்மனையின் இசைப்புலவர் "தான்சேன்" என்பவர் புட்பலதிகா என்ற இராகத்தைப் பாடி யானையின் மதத்தை அடக்கினார் என்ற வரலாறும் உண்டு.

இவ்வாறு தாவரங்களும், விலங்கினங்களும் இசையின் வழியே பல நன்மைகளையும், விடுதலையையும் அடையும்போது, கருவறையிலிருந்து கல்லறை வரை இசையில் வாழ்ந்து கொண்டு இருக்கும் நமக்கு இசையின் வழியே நாம் நோயிலிருந்து பெறக்கூடிய விடுதலையையும், நன்மைகளையும் திருமறையில் இசையின் வழியே பெற்ற விடுதலையையும் கூற விழைகிறேன்.



**நோயிலிருந்து இசையின் வழியே விடுதலை**

அமெரிக்காவைச் சேர்ந்த அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர். புருணல் என்பவர் இசையின் வழியே கத்தியின்றி நோயாளியின் நோயைக் குணப்படுத்துகின்றார். இதைப்போன்று தமிழிசையிலும் பல இராகங்கள் நோயிலிருந்து விடுதலை தரக்கூடிய இராகங்களாக உள்ளன. தமிழிசையென்று சொல்லும் போது எடுத்துக்காட்டாக ஓர் இராகத்தை மட்டும் நான் குறிப்பிடுகின்றேன். பழம்பஞ்சுரம் என்பது நம் முன்னோர் ஓர் இராகத்திற்கு வைத்த பெயர். நம் முன்னோர்கள் பெயர்களை வைக்கும்போது இராகத்தின் தன்மை மற்றும் அதன் குணங்களை வைத்து அந்தச் சுரக்கோர்வைகளுக்குத் தமிழ்ப் பெயர்களை வைத்தனர். அப்படி வைத்த பெயர்தான் 'பழம்பஞ்சரம்" அதைத் தற்பொழுது சங்கராபரணம் என்று பெயர் வைத்து யாருக்குமே சொந்தமில்லாத இசைக்கு ஒரு சமயத்தை சேர்ந்த தெய்வத்தின் பெயரையும் அவர் அணியும் ஆபரணங்களையும் வைத்துள்ளனர். "சங்கரா"- என்றால் சங்கரன் என்று பொருள். "பரணம்" - என்றால் அணியும் ஆபரணம் என்று பொருள். இவைகளை இணைத்து சங்கராபரணம் என்று பெயர் வைத்துள்ளனர். இவ்வாறு தமிழிசையில் கையாளப்படும் பெயர்கள் எல்லாம் மருதம், முல்லை நெய்தல், பாலை போன்ற பகுதிகளில் நம் முன்னோர்கள் பாடிய இராகங்கள் தற்பொழுது சிலவற்றை மாற்றி கர்நாடக இசையென்று சொல்கின்றனர். அப்படி அந்த இசையின் வழியே நோயிலிருந்து குணமாக்கும் சில இராகங்களையும் விடுதலை அடையும் நோய்கள் சிலவற்றையும் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 01. தலைவலி | - | மத்தியமாவதி |
| 02. தலைச்சுற்றல் | - | அம்சத்வனி |
| 03. வயிற்றுவலி | - | நாதநாமக்கிரியை |
| 04. உயர் இரத்த அழுத்தம் | - | பூர்வ கல்யாணி |
| 05. தாழ்வு இரத்த அழுத்தம் | - | வாசஸ்பதி |
| 06. ஆஸ்மா | - | நாட்டை |
| 07. மன அமைதி | - | சாமா |
| 08. சக்கரைவியாதி | - | நளினகாந்தி |
| 09. தூக்கமின்மை | - | நீலாம்பரி |
| 10. மறதி | - | ரேரஞ்ஜனி |

இந்த இராகங்களைக் கேட்பதன் மூலம் அல்லது அந்த இராகங்களில் அமைந்த பாடல்களைக் கேட்பதன் மூலம் வியாதி குணமடையும். கிறிஸ்தவர்களுக்கு என்று நம் முன்னோர்கள் தந்த ஒரு பொற் காணிக்கை கீர்த்தனைகள். அந்தக் கீர்த்தனைகளில் இந்த இராகங்களில் பாடல்கள் அமைந்துள்ளன. ஆனால் அவற்றை பயன்படுத்தாமையால் மேல்நாட்டு இசையில் பாடல்களை எடுத்து விற்பனை செய்கின்றனர். அதனால் பாடல்களின் பொருளும், இசையின் தன்மையும் அழிந்து கொண்டே வருகின்றன.

ஏ.கா. 'ஆத்துமாவே என் முழு உள்ளமே' என்ற பாடலில் அடங்கியுள்ள நல்ல பொருள்கள் ஒலிப்பேழைகளில் வந்த இசையின் வழியே பாடும்போது பொருள்மாற்றம் அடைகின்றது. அந்தப் பாடலில் சரணங்களைப் பாடிவிட்டு ஆண்டவரே என்ற கீர்த்தனையில் போடப்பட்டபடி பாட வேண்டும். ஆனால் ஒலிப்பேழையில் ஆத்துமமே என்று இசை அமைத்துப் பாடி இருக்கின்றனர். நாமும் பலர் பொருள் தெரியாமல் இவ்வாறு பாடல்களைப் பாடுகின்றோம். பொருள் உணர்ந்து உண்மையான பண்ணில் பாடும்போதுதான் அதன் குணங்களையும் தன்மைகளையும் அறிய முடியும். அவ்வாறு பாடல்களைக் கேட்டால் கண்டிப்பாக நோயிலிருந்து விடுதலை அடைய முடியும். இந்த முறையை பெரும்பாலான மருத்துவமனைகளில் இப்பொழுது பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக மதுரையில் அப்பல்லோ மருத்துவமனையில் வரும் நோயாளிகளுக்குப் பயன்படுத்தி வெற்றியையும் காண்கின்றனர். இவைகளை இராகங்களும், குணங்களும் என்ற நூலிலும் இசையின் வழியே நோய்களைத் தீர்த்தல் என்ற ஒலிப்பேழையிலும் வெளியிட்டுள்ளனர். அவைகள் நம் வாழ்க்கையில் நோயிலிருந்து விடுதலை பெறுவதற்கு உதவியாக இருக்கும்.

**2. திருமறையில் இசையின் வழியே விடுதலை**

திருமறையில் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் இசையும், இசைப்பாடலும் வாழ்வில் முக்கியமான கட்டங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவைகள் அந்தக் காலத்தில் எவ்வாறு விடுதலையைத் தந்துள்ளன என்பதையும், அவைகள் தற்கால சூழ்நிலையில் நமக்கு எவ்வாறு சவாலாக உள்ளன என்பதையும், திருமறையிலிருந்து 3 எடுத்துக் காட்டுகளுடன் விளக்க முற்படுகின்றேன். திருமறையில் பழைய ஏற்பாட்டில் இசையைக் காண்கின்ற அளவுக்கு புதிய ஏற்பாட்டில் காண இயலாது இருப்பினும் முழுத் திருமறையிலும் இசை பல இடங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளது.

**எரிக்கோ மதிலை இடியச் செய்த இசை-யோசு. 12-20**

இறைவனின் ஆற்றல் இசையின்வழியே இங்கு வழங்கப்படுகிறது. இஸ்ரவேல் மக்கள் தங்குவதற்கு இடமின்றி நாடோடியாக அலைந்து திரிந்த காலத்தில் கடவுள் அவர்களுக்கு ஒரு நாட்டை வாக்குத் தத்தம் செய்தார். ஆனால் அந்த நாட்டை அடையத் தடையாக இருந்தது அந்த மதில் சுவர். கடவுள் தந்த வாக்கை நிறைவேற்ற இசையின் வழியே தொனியை மக்கள் எழுப்பச் செய்தார். அப்பொழுது எரிக்கோ மதில் சுவர் இடிந்து விழச்செய்தார். சிறுமைப்பட்ட மக்களாகிய இஸ்ரவேலருக்கு கடவுள் இசையின் வழியே பெரிய விடுதலையைத் தந்தார்.

அன்றையச் சூழ்நிலையில் இசையின் வழியே தடையாக இருந்த மதில் சுவர் தகர்க்கப்பட்டது. இன்றைய சூழ்நிலையில் சமுதாயத்தில் காணப்படும் தடுப்புச் சுவர்களைத் தகர்க்க வேண்டியது நம்முடைய கடமையாகும். இன்றைய சூழ்நிலையில் சமுதாயத்தில் காணப்படும் தடுப்புச்சுவர்களாகிய சாதி, சமயம், பொருளாதாரம், மற்றும் ஏற்றத்தாழ்வு போன்ற தடுப்புச் சுவர்களைத் தகர்க்கும் வகையில் நம் பாடல்களும் இசையும் இருக்க வேண்டும். இவ்வாறு சமுதாயத்தில் தடுப்புச் சுவர்களாக இருக்க இவைகளைத் தகர்த்தெறிய இசையை விடுதலைக் கருவியாய்ப் பயன்படுத்த வேண்டும்.

**பொல்லாத ஆவியை விரட்டிய தாவீதின் இசை-1 சாமு. 16 : 23**

சவுலுக்குப் பிடித்து இருந்த பொல்லாத ஆவியைத் தாவீதின் சுரமண்டல இசையின் வழியாய் விரட்டியதாக இந்தப் பகுதியில் நாம் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் திருமறைப் பகுதி இசையின்மூலம் விடுதலை அடையச் செய்த மற்றொரு பகுதியாகும். இந்த நிகழ்வு இசையின் வழியே குணப்படுத்தும் தெய்வீக ஆற்றல் இசைக்கு உண்டு என்பதை நமக்கு விளக்குகிறது.

தாவீது வாசித்த இசைக் கருவியானது நரம்பு இசை கருவி. அவற்றை வைத்து எவ்வாறு இந்த நிகழ்வு நடந்திருக்கும் என்பது இந்த காலச் சூழ்நிலைக்கு சற்று முரண்பாடாக உள்ளது.

இன்றய சமூகத்தில் பேய் பிடித்து இருக்கும் ஒரு நபருக்குப் பேய் விரட்ட வேண்டுமென்றால் பம்பை, உடுக்கை போன்ற இசைக் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். காரணம் அவைகளின் சத்தம் அதிகமாகவும் வீரமாகவும் இருக்கும்.

ஆனால் சவுலுக்குப் பிடித்திருந்த பொல்லாத ஆவியை விரட்ட தாவீது கண்டிப்பாக வீரமான இசையைத்தான் வாசித்திருக்க வேண்டும். அப்படிப் பொல்லாத ஆவியை விரட்ட நாம் இசையைப் பயன்படுத்த வேண்டும்.

இன்றய சூழ்நிலையில் சமுதாயத்தில் பிடித்திருக்கும் பொல்லாத ஆவியாகிய பெண்ண டிமைத்தனம், சாதீயம், வரதட்சணைக் கொடுமை, சமயவெறியாட்டம் போன்ற பொல்லாத பேய்களை விரட்டியடிக்கத் தக்க வகையில் நம் பாடலின் வார்த்தைகளையும் அவைகளுக்கு உயிர் கொடுக்கும் இசையையும் அமைத்துப் பொல்லாத ஆவிகளை விரட்ட இசையை நாம் பயன்படுத்த வேண்டும்.

**3. விலங்குகளைத் தகர்த்தெறிந்த துதிப்பாடல்**

**அப்போஸ்தலர் 16 : 19 - 34**

புதிய ஏற்பாட்டில் இசையின் வழியே விடுதலை அடைந்த நிகழ்வு இந்தப்பகுதியாகும். சிறையில் கைகளிலும் கால்களிலும் விலங்குகள் கட்டப்பட்டிருந்த போது அவர்கள் பாடிய துதிப்பாடல்களின் வழியே விடுதலை அடைந்தனர் என்று வாசிக்கின்றோம்.

பவுலும் சீலாவும் நடு இரவில் கடவுளைத் துதித்துப் பாடினார்கள். துதிப்பாடலைச் சிறையிலிருந்தவர்கள் அனைவரும் கேட்டு மகிழ்ந்தனர். திடீரென்று பூமி மிகுதியாக அதிர்ந்தது. சிறைச் சாலையின் அத்திபாரங்கள் அதிர்ந்தன. அனை வருடைய கட்டுகள் அனைத்தும் கழன்று போயின.

பவுலும் சீலாவும் பாடிய அந்தத் துதிப் பாடலின் வழியே அவர்களுக்குப் போடப்பட்டிருந்த அரசியல் விலங்குகள் கழன்றுபோயின. அனைவருக்கும் அன்று விடுதலை வழங்குகிறார்கள்.

இன்றைய சூழ்நிலையில் நம்மைச் சுற்றிப் போடப்பட்டிருக்கும் அரசியல், சமூக, சமய, கலாசாரம், பொருளாதாரம், வறுமை, வியாதி, கடன்தொல்லை, வட்டியின் மூலம் மக்களை ஒடுக்குதல் போன்ற விலங்குகளிலிருந்து நாம் விடுதலை அடைய இசையை ஒரு கருவியாகப் பயன்படுத்துவோம்.

**முடிவுரை:**

அன்று இஸ்ரவேல் மக்களுக்குத் தடையாக இருந்த சுவரையும், சவுலுக்குப் பிடித்திருந்த பொல்லாத ஆவியையும், பவுல் சீலாவுக்குப் போட்டிருந்த விலங்கினையும் ஆண்டவர் இசையின் வழியே விடுதலை அடையச் செய்தது போல் இன்று நம் சமுதாயத்தில் காணப்படும் பிரிவினைச் சுவர்கள், மக்களை அடிமைப்படுத்தும் தீய பிசாசுகள், மக்களை ஒடுக்கும் அடிமை விலங்குகள் போன்றவற்றிலிருந்து சமுதாயம் விடுதலை அடைய இசைக்கலையை விடுதலைக் கருவியாய்ப் பயன்படுத்துவோம்.

**வாழ்க இசை! வளர்க தமிழ் இசை!**
**பெருகுக விடுதலை!**

**மன அழுத்தமா?**

அதிகப்படியாக டி.வி. பார்ப்பது டி.வி, ரேடியோ மற்றும் பத்திரிக்கைகளில் வரும் செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது, வீட்டிலும் அலுவலகத்திலும் எதிர்மறை எண்ணங் கொண்ட மனிதர்களுடன் நேரம் செலவிடுவது, தன்னைத் தானே எதிர்மறையாக எண்ணிக் கொள்வது, அதிகமாகக் கவலைப்படுவது, குப்பை கூழமான சுற்றுப்புறம், வரவிற்கு மீறிய செலவு, வேலைகளை முடிக்காமல் தள்ளிப் போடுவது தீர்க்கப்படாத சண்டைகள் ஆகியவை மனவலிமையைக் குலைத்து உங்களைத் தீராத மன அழுத்தத்துக்குள் தள்ளக் கூடியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்திற்கு நிகராக வேறொன்றில்லை

குடும்பம் ஒருவருக்கு அதன் இலட்சணத்துக் குரியவாறு அமைந்தால் அதுவும் முழுமையாக அமைந்தால் அது அவர் சாதனைக்கு உதவும். பணமும், படிப்பும், அந்தஸ்தும், செல்வாக்கும் தனித்தனியே சாதிப்பதை விட அதிகச்சாதனை செய்ய உதவும். சமூகத்தில் பண்பின் சிகரமாக விளங்குவது குடும்பம். இதன் வேலையைச் செய்ய வேறொரு சாதனமில்லை.

உலகெங்கும் திருடர்கள், குற்றவாளிகள், பயங்கரவாதிகள் போன்றவர்களின் பூர்வீக சரித்திரத்தை ஆராய்ந்ததில் சீரழிந்த குடும்பத்தில் பிறந்தவர்கள் அல்லது குடும்பமில்லாமல் வளர்ந்தவர்கள் எனத் தெரிகிறது. குடும்பம் மனிதர்களை உருவாக்கும். குடும்ப மில்லாமல் வளர்ந்தவன் குற்றவாளியாகி விடுகிறான். படைப்பில் குடும்பம் தாவரத்திற்கு ஏற்படவில்லை. விலங்குக்கும் முதல் நிலைகளில் இல்லை. நிலையான குடும்பத்துக்குரியவன் மனிதன் மட்டுமே. மனித வாழ்விலும் குடும்பம் ஆரம்ப நாளிலிருந்து ஏற்படவில்லை. நாகரீகம் வளர வளர குடும்பம் வளர்ந்தது.

கூட்டமே முதலில் ஏற்பட்ட மனித நிறுவனம். எல்லோரும் முக்கியம். நான் கடைசி என்ற மனப்பான்மை அனைவருக்கும் இருந்தால் குடும்பம் உண்டு. இருக்கும் எல்லா வசதிகளும் எனக்கே. முதலில் எனக்கு, மிஞ்சினால் மற்றவர்க்கு என்ற இடத்தில் உருவாவது குடும்பமில்லை, கூட்டம்.

குடும்பத் தலைவருக்கும் மற்றவர்க்கும் பொதுவான வசதிகளில் சாப்பாடு, படுக்கை, வேறுபாடில்லாமல் ஒரேமாதிரியாக நடத்துவது நல்ல குடும்பம். உயர்ந்த குடும்பம். வேற்றுமை பாராட்டாத குடும்பமே குடும்பம். வேற்றுமை பாராட்டினால் அது குடும்பமில்லை. குடும்பம் செய்யும் வேலையைச் செய்ய இன்றுவரை உலகில் ஒரு நிறுவனம் ஏற்படவில்லை. முதற் கடமையாகக் குழந்தைகளைக் குடும்பம் வளர்த்து படிக்கவைத்து திருமணம் செய்துவைத்து சமூகத்திற்களிக்கிறது. பண்பான குடும்பம் பணத்தைக் கருதாது. குடும்பம் ஒரு பொக்கிஷம். தேளாகக் கொட்டினாலும் மீண்டும் அன்பு செலுத்தும்.

## உரிமை!

நாய்வாலை
நிமிர்த்தி நிமிர்த்தியே
நாங்கள் காலங்களை
வீணாக்கிவிட்டோம்!
இன்னுமேன் அதை
விடாப்பிடியாக
பிடித்துக்கொண்டிருக்கவேண்டும்?
ஒன்றில்
நாங்கள் நிமிரவேண்டுமானால்
வாலை விடவேண்டும்!
அல்லது
அதை அறுத்தெரிய வேண்டும்!
இல்லையென்றால்
நாய்வாலுடனேயே
இன்னும் பலகாலங்களை
நகர்த்த வேண்டியிருக்கும்!

அமிர்தகழியான்

## இடம் பெயர்ந்த தமிழர்

தந்தியறுந்த வீணை
சிறகொடிந்த பறவை
காம்புடைந்த மலர்
பாழடைந்த குளம்
இவை படும் துயரங்கள்
நாம் அறிவோம் -ஏனெனில்
நாம் இடம் பெயர்ந்த தமிழர்

## ஓய்வு

இயங்கிக் கொண்டிருக்கும் இயந்திரம்
ஓடியாடும் சிறுபிள்ளை
காற்றிலாடும் மலர்கள்
நடமாடும் கால்கள்
அசையும் மேகங்கள்
துடிக்கும் இதயம்
இதன் அருமையை உணரும்

ராஜா பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறை அறிவை வளர்ப்போம்

' மெற்றில்டா '



**அன்புமிக்க மாணவர்களே! 9ம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் கத்தோலிக்கத் திருமறைப் பாடநூலில் உள்ள இடர்களைச் சிறிதளவாவது நீக்க நினைத்து இந்த இதழில் இருந்து சில அம்சங்களை விரிவாகத் தர இருக்கின்றோம். எனவே இவற்றைக் கற்று பயன் பெறுவீர்கள் என நம்புகின்றோம்.**

## குலமுதல்வர்கள் வரிசையில் ஒருவர்

### ஆபிரகாம்:

தெராகு என்பது ஆபிரகாமின் தந்தையின் பெயர். நாகூர், ஆரோன் ஆகியோருடன் ஆபிரகாமையும் சேர்த்து இவருக்கு மூன்று புதல்வர்கள். தெராகு இறக்கும் முன்னேயே ஆரோன் இறக்கின்றார். ஆபிரகாமின் மனைவி சாராய். இவர்களுக்கு குழந்தைகள் பிறக்கவில்லை. தெராகு ஆபிரகாம், சாராய், ஆரோனின் மகன் லோத்தையும் அழைத்துக் கொண்டு கானான் நாட்டுக்குச் சென்றார். காரான் என்ற இடத்தில் தங்கி வாழ்ந்தனர். தெராகு 205வது வயதில் அங்கேயே இறந்தார். இவ்வேளையில் இறைவன் ஆபிராமை அழைத்தார். "உன்நாட்டில் இருந்தும் உன் இனத்தவரிடம் இருந்தும், உன் தந்தை வீட்டில் இருந்தும் புறப்பட்டு நாம் உனக்குக் காண்பிக்கும் நாட்டுக்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன், உனக்கு ஆசி வழங்குவேன்.... ஆசிபெறும்" என்றார்.(தொ.நூ12:2-3)

ஆண்டவர் சொன்னபடியே லோத்துடன் தமது 75வது வயதில் ஆரானை விட்டு ஆபிராம் மனைவியையும் கூட்டிக்கொண்டு சென்று, கானான் நாட்டில் நுழைந்து, கருவாலி மரத்தை அடைந்தார். கானானியர் அவ்விடத்தில் வாழ்ந்தனர். அங்கு ஆண்டவர் தோன்றி "உன்வழி மரபினருக்கு இந் நாட்டைக் கொடுப்பேன்" என்றார். அங்கே ஒரு பலிப்பீடத்தை எழுப்பி விட்டு புறப்பட்டுப் பெத்தேலுக்குக் கிழக்கே இருந்த மலைப்பக்கம் சென்று தேலுக்கு மேற்கே ஆயிக்குக்கு கிழக்கே கூடாரம் அமைத்து குடியிருந்தார். அங்கேயும் பலிப்பீடம் அமைத்து தொழுதார். இப்படியாக நெகேபு நோக்கிச் சென்றார். அங்கு பஞ்சம் நிலவியதால் எகிப்துக்குச் சென்றார். அங்கிருந்து மீண்டும் நெகேபுக்கு பணக்காரராகி திரும்பி வந்தார். முதலில் கூடாரம் அமைத்த இடத்திற்கு வந்து பலிப்பீடத்தில் தொழுதார். சகோதரர் லோத்தை விட்டுப்பிரிந்தார்.

அங்கு ஆண்டவர் மீண்டும் பேசினார். "நீ இருக்கும் இடத்தில் இருந்து உன் கண்களை உயர்த்தி, வடக்கே, கிழக்கே, தெற்கே, மேற்கே பார். ஏனெனில், நீ காணும் இந்த நாடு முழுவதையும் உனக்கும் உன் வழிமரபினருக்கும் என்றென்றும் கொடுக்கப் போகிறேன்." என்று கூறினார். (தொ.நூ 13:16-17) ஆகவே, ஆபிராம் தம் கூடாரத்தைப் பிரித்து எபிரோனில் இருந்து மம்ரே என்ற கருவாலி மரத் தோப்பருகில் வந்து வாழ்ந்து ஒரு பலிபீடமும் எழுப்பினார்.

இதற்குப் பின் ஆண்டவர் "ஆபிராம் அஞ்சாதே, நான் உனக்குக் கேடயமாக இருப்பேன். உனக்குப் பெரும் கைமாறு கிடைக்கும்" என்றார். தனக்குக் குழந்தை இல்லாத குறையை ஆபிராம் கூற ஆண்டவர் பலிப்பொருட்களைக் கொண்டு வரும்படி கூறினார். அவர் கூறியவற்றை எல்லாம் ஆபிராம் செய்தார். ஆண்டவர் இங்கும் ஆபிராமுடன் ஓர் உடன்படிக்கை செய்தார். பின் ஆபிராமிற்கு தொண்ணூற்றொன்பது வயதாய் இருக்கையில் மீண்டும் அவருக்குத் தோன்றி உடன்படிக்கை செய்தார். (தொ.நூ17:5-8) இதன் படி ஆபிராம்," ஆபிரகாம் " என அழைக்கப்பட்டார். மனைவி சாராள் "சாரா" என அழைக்கப்பட்டாள். ஈசாக்கின் பிறப்பு அறிவிக்கப்பட்டது.

தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மற்றவர்களின் ஒத்துழைப்பில் உங்களுடைய வெற்றி?

நீங்கள் வெற்றி பெற வேண்டுமானால் மற்றவர்களின் தேவைக்கேற்ப நீங்கள் அனுசரித்துக் கொள்ளும்போது அது எளிதில் சாத்தியமாகிவிடுகிறது. அவர்களுடைய கவனம், ஆர்வம், நம்பிக்கை, ஆசைகள் ஆகியவற்றுக்கு நீங்கள் அனுசரித்து நடக்கும்போது வெற்றி உங்களுக்குக் கிடைக்கிறது.

அதற்காக மற்றவர்களைத் திருப்திப் படுத்துவதே உங்களின் வாழ்க்கையாகிவிட முடியாது. நிச்சயமாக நான் அதைச் சொல்லவில்லை. உங்கள் ஆசைப்படி எண்ணப்படி நீங்கள் நடந்துகொள்வதைவிட மற்றவர்களின் ஆசைப்படியும் எண்ணப்படியும் நடப்பதற்குத்தான் உங்களுக்கு அதிகமான மனோசக்தி தேவையாக இருக்கும். மற்றவர்களுக்குத் தடையாக இருப்பதைவிட மற்றவர்களுடன் ஒத்துழைப் பதற்குத்தான் புத்திசாலித்தனம் அதிகமாகத் தேவைப்படும். மற்றவர்களின் மீது உங்கள் எண்ணங்களைத் திணிப்பதைவிட மற்றவர்களின் நோக்கங்களோடு நீங்கள் ஒத்துழைப்பது உங்களின் வெற்றிக்கு உதவியாகவும் இருக்கும்.

ஒருவருடன் இணக்கமாக நீங்கள் ஒத்துழைக்கின்றபோது ஆக்கபூர்வமான ஆலோச னைகளை நீங்கள் வழங்கக்கூடாது என்று அர்த்தமில்லை. பயனுள்ள யோசனைகளை நீங்கள் சொல்லுகிறபோது விரைவான வெற்றியும் உங்களுக்குக் கிடைக்கிறது. இது தவிர பார்த்தவைகளை மீண்டும் ஒரு முறை சிந்தித்துப் பார்க்கலாம்.

மக்களை உங்களிடம் ஈர்ப்பது ஒரு நல்ல காரியந்தான். ஆனால் மறைமுக முறைகள் மூலம் ஈர்ப்பதை விட அவர்களிடம் நீங்கள் நேரில் சென்று சந்தித்து ஈர்ப்பது நீடித்து நிற்பதற்கு உதவும். அடுத்தவரின் கவனம் எங்கே இருகின்றது என்று கண்டுபிடியுங்கள். அவரிடம் சென்று அதைப்பற்றி இனிதாக உரையாடுங்கள். அப்போது அவருடைய கவனம் உங்களின் பக்கம் திரும்பும்.

அடுத்தவரின் ஆர்வம் எதில் இருக்கிறது என்று கண்டுபிடியுங்கள். உங்களின் ஆர்வம் அவருடைய ஆர்வத்தோடு இணைந்ததாக இருக்கட்டும். உங்களுடைய ஆர்வமும் அவருடைய ஆர்வமும் ஒன்றுபடுகின்றபோது உங்கள் இருவரிடையேயும் பிரிக்க முடியாத பந்தம் ஏற்பட்டுவடுகிறது.

அடுத்தவரின் நம்பிக்கை எதில் இருக்கிறது என்று கண்டுபிடியுங்கள். அவரது நம்பிக்கையினை உறுதிசெய்யுங்கள். நியாயப்படுத்துங்கள். பலப்படுத்துங்கள். அவருடம் உங்களுடன் சேர்ந்து அந்த நம்பிக்கைக்குப் பாதுகாப்பாக இருப்பார்.

அவருடைய ஆசைகள் என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். அந்த ஆசைகளைப்

### வாழ்வை வாழ்ந்திடுவோம்

யுத்தமில்லாமல்
நித்தம் வாழ
உலகொன்று சமைப்போம் - அதில்
இறைவன் தந்த
கொடையாம் உயிரை
காத்து வளர்த்திடுவோம்.

வன்முறை என்னும்
கொடூரந் தன்மை
வாழ்வில் அறுத்திடுவோம் - நெஞ்சில்
அன்பெனும் பண்பை
அணிகலனாக்கி
வெம்பகை வென்றிடுவோம்

உயிர் வாழும் காலம்
சில நாள்களாயினும்
சிந்தித்துச் செயற்படுவோம் - என்றும்
தூய்மையும் துணிவும்
நேயமும் கொண்டு
நிறைவாய் வாழ்ந்திடுவோம்.

ம. அனுஜா, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனைக் கொல்லும் பாவம்

## பொறாமை

பொறாமையும் பகையும் மனிதனைப் பாழ்படுத்தி அழிவுக்குட்படுத்தும். பொறாமை குடும்பங்களை நாசம் பண்ணும். பொறாமை நண்பர்களை விரட்டியடித்து விடும். பொறாமை நமது ஆன்மாவையும் நம்மையும் கொன்றொழித்து விடும். பொறாமைக்காரன் பிறருடைய வாழ்வைக் கண்டு மனம் புழுங்குகிறான். பிறருடைய வாழ்வைத் தன்னுடைய தாழ்வாகக் கருதுகிறான். பிறருடைய உயர்வைத் தன் வீழ்ச்சியாக எண்ணுகிறான். பொறாமையால் முன்னேறினவர்களை நாம் ஒரு காலும் கண்டதில்லை. ஆனால் பொறாமையால் சீரழிந்தவர்களைக் கண்டிருக்கின்றோம்.

நமக்குப் பொறாமை வந்துவிட்டால் நாம் பூரண மனிதராக இருக்கமுடியாது. பொறாமை எப்படியாவது நம் உருவைக் குலைத்து விடும். நம் அழகைச் சிதைத்து விடும். நம் குணாதிசயத்தை குறைத்துவிடும். நம் உடலையே உருக்கிவிடும். நம் எலும்பைக்கூட உருக்கிவிடும் என வேதாகமம் சொல்லுகிறது. ஒரு பூச்செடி முட்செடியைப் பார்த்து "நீ உன் அருகே வருகிறவர்களின் ஆடைகளின்மீது ஏன் அவ்வளவு பொறாமைகொள்கிறாய்? அந்த ஆடைகளால் உனக்குப் பயன் என்ன?" என்று கேட்டது. அதற்கு விடையாக முட் செடி இவ்வாறு கூறியது. "எனக்கு அந்த ஆடைகளால் பயன் ஏதுமில்லை, அந்த ஆடைகளை நான் அணிந்துகொள்ளவும் விரும்பவில்லை, ஆனால் அந்த ஆடைகளை யெல்லாம் கிழித்துக் கிழித்து விடுவதே எனக்கு ஆசை". இந்த முட்செடியைப் போலவே பொறா மைக்காரரும் பிறரைத் துன்புறுத்தி அழிப்பதையே பேரின்பமாகக் கருதுகின்றார்கள். பிறர் தாழ்வடைந்து சின்னா பின்னமாகச் சிதைந்து போக வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கமாகும். ஆதாம் ஏவாளின் நல்வாழ்வைக் கண்டு சகிக்கமுடியாத சாத்தான் அவர்களைப் பாழாக்குவதில் மனம் மகிழ்ந்தான். ஆண்டவர் பொறாமையை அருவருக் கின்றார். பரிசுத்த பவுல் கூறியிருக்கின்றார் "வீண் புகழ்ச்சியை விரும்பாமலும் ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக் கடவோம்". காயீன் ஆபேல்மீது பொறாமை கொண்டான். இப்பொறாமை காயீன் உள்ளத்தில் எரிச்சலுண்டாக்கியது. பொறாமையால் காயீன் ஆபேலைக் கொன்றான்.

நம் வீடுகளிலும் நாடுகளிலும் பொறாமை கொண்ட எந்த மனிதனாவது உண்மையாகவே மன மகிழ்ச்சியாய் இருந்ததுண்டா? இறைவன் மீது இரக்கமாயிருந்த லூசிபர் என்ற தேவதூதன் அனாவசியமாக நியாயமின்றி ஆண்டவர் மீது பொறாமைகொண்டான். உடனே அவன் (லூசிப்பேய்) சாத்தான் ஆனான். அப்பொறாமை அவனையே அழித்து விட்டது. கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து கொல்வதற்குக் காரணமாயிருந்த பாவங்களுள் ஒன்று பொறாமையாகும். பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக் கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்தான்.

கொலைக்காரனின் கொடிய கோடரியின் கூரிய முனையைக் காட்டிலும் பன்மடங்கு கூர்மை யானது பொறாமை என்று ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார். பொறாமைக்காரன் பிறரோடு கூடிவாழ முடியாது. காரணம் பிறர் வாழ்வை அவனால் பொறுக்க முடியாது. அவனும் வாழமாட்டான். பிறரையும் அவன் வாழ விட மாட்டான். அவன் ஓர் ஆன்ம குஷ்டரோகி ஆகி விடுகிறான். அப்பாழான பொறாமைப் பாவத்தை நாம் எப்படி விட்டு விலகுவது என்று யோசிக்கலாம். பொறாமை நம்மிடம் உண்டு என்ற உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும். நமது தோல்விக்காக பிறர் மீது பழிசுமத்தக்கூடாது. நம்மை ஒரு புது மனிதனாக்கும்படி இயேசுவிடம் இரந்து மன்றாட வேண்டும். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து வினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு என்ற வாக்கியத்தை நாம் அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருந்தோமானால் நாம் கிறிஸ்துவின் பிள்ளைகளாக மாறலாம். கிறிஸ்துவின் ஆவியானவர் நம் இதயத்தில் வந்து வாசம் பண்ணும் படி வருந்திக் கேட்கவேண்டும். ஆவியின் முதற்கனி அன்பு. அன்பு நமது இதயத்தை முற்றிலும் நிரப்பிப் பொங்கி வழியும்பொழுது அவ்விடத்தில் பொறாமை தங்கியிருக்க இடமில்லாமல் வெளியேற்றப்பட்டு விடும். அன்புள்ள இடத்தில் பொறாமை இருக்க முடியாது. எனவே பொறாமை நமது இதயத்திலிருந்து அகற்றப் படுவதற்கு ஒரே வழி பரிசுத்த அன்புக் கடவுளாகிய இயேசுகிறிஸ்து நம் இதயத்தை முற்றிலும் ஆட்கொள்வது தான். நமது இதயத்தை இயேசு கிறிஸ்துவுக்கு முழுவதும் ஒப்புக் கொடுக்கும்போது அவர் நம் இதயத்தில் தங்கி வீற்றிருப்பார். இயேசு கிறிஸ்துவாலே பொறாமையை நாம் வெல்லலாம்.

- யோ. ஞானம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணவன் முழுக் குடும்பத்தையும் பராமரி க்கும் தலைவனாகவும், மனைவி கணவனுக்குக் கீழ்ப்படிந்து, பொறுமையின் அணிகலன்களோடு இல்லத்தை இனிதே ஆள்பவளுமாகின்றாள். இவள் தாயாய் தாரமாய், நல்லாலோசனை கூறும் மதி மந்திரியுமாய், தன் கணவன் பிள்ளைகளின் நலன்களைப் பாதுகாக்கும் முக்கிய பொறுப்புடையவளும் ஆவாள்.

# குடும்பம் ஒரு கோயில்

ஜெயமணி லோரன்ஸ்

நமது மறை மாவட்டத்தில் இவ் ஆண்டு குடும்ப ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள் ளதை நாம் அனைவரும் அறிவோம். நம் திருத்தந்தை இரண்டாவது (2ம்) அருளப்பர் சின்னப்பர் வாயிலாகவும் குடும்ப நலன்களைப் பற்றிய பல கருத்துக்களையும், செய்தி களையும் அறியக் கூடியதாகவுள்ளது. எனவே நாம் குடும்ப உறவு எவ்வாறு உள்ளது என்று சற்று ஆராய் தோமா? அல்லது நல்ல கிறிஸ்தவக் குடும்பங்கள் என்று பிறருக்கு எடுத்துக் காட்டாக வாழ்கின்றோமா?

முதலில் நம் குடும்பங்கள் ஒரு கோயில் ஆக வேணடும். நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம் என்று ஒரு கவிஞன் பாடியுள்ளான். உண்மை. எனது குடும்பங்களின் ஒற்றுமை, சமாதானம், புரிந்துணர்வு, அன்பு, பரிமாற்றம், மகிழ்ச்சி இவற்றில் தான் நாளைய இளம் சமுதாயத்தின் நல் வாழ்வு அமையும். அமைய முடியும்.

இன்று உலகம் சமாதானம் இழந்து போர்க் கோலம் பூண்டுள்ளது என்றால் அதற்குக் காரணம் ஒவ்வொரு குடும்பங்களுமேயாகும். கணவன், மனைவி, இரு பாலாரும் வெறும் உடல் இச்சைக்காகப் பிணைக்கப்பட்டவகள் அல்ல. கிறிஸ்தவம் கூறுவது போல் கடவுள் ஆணையும் பெண்ணையும் தெய்வீக சாயலாகப் படைத்து, திருமணம் என்னும் பிணைப்பால் "இனி அவர்கள் இருவர் அல்லர் ஒரே உடல் ஆவர். ஆகவே கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்றார். (மத் 19: 5–6) ஞான அறிவோடு தெய்வீக சாயலைத் தாங்கிய நாம் அன்னவரும் ஒருவரை ஒருவர் புரிந்து இன்ப துன்பத்திலும், வாதை நோவுகளிலும் ஒருவரை ஒருவர் தாங்க வேண்டும் என்பதேயாகும். கணவன் மனைவி யிடம் எந்த வித ஒளிவு, மறைவு, வீண் சந்தேகங்கள் இருத்தல் கூடாது. இதனால் ஏற்படும் சண்டை சச்சரவுகள், பிளவுகள் எதிர்காலத்தில் நம் பிள்ளைகளின் நல் வாழ்வைப் பாதிக்கும்.

இதற்கு அமைய நாம் வாழ ஒரே வழி இயேசுவிடம் நம் குடும்பங்களை ஒப்புக்கொடுத்து மாசில்லாத் திருக்குடும்ப வாழ்வை பின்பற்றுவதுதான். இக் குடும்பத்தில் மரியாள் குடும்பப்பணி அனைத்திலும் இறைவனுக்குக் கீழ்படிவோடும், தெய்வீக பக்தியுடனும் தன் இல் வாழ்வை ஆரம்பிக்கின்றாள். தச்சன் மனைவியானாலும், அனைத்திலும் தன் கணவனின் பக்க பலமாக இருந்ததோடு, தம் வறுமையிலும், பெருமை காண்கின்றாள். மேலும் அவரது பிறர் அன்பையும் நாம் பல இடங்களிலும் காண்கின்றோம்.

உ+ம். மரியாள் தாய்மை நிலை எய்த நிலையிலும் தன் உறவினரான எலிசபெத் அம்மாள் முதிய வயதில் கருவுற்றதை அறிந்து விரைந்தோடி பணிவிடை புரிவது (அரு 1: 39–45 வரை) ஏன் நம் இறைமகனான இயேசுவும் ஒருமுறை 12வயதுப் பாலகனாக இருந்தபோது மூன்று நாட்கள் தம் தாய் தந்தையை விட்டுப் பிரிந்து, தந்தையின் இல்லத்தில் போதித்துக்கொண்டு இருப்பதைக் கண்டு, மரியாள் நானும் உன் தந்தையும் ஏக்கத்தோடு தேடினோமே என்றதும் தன் பணியை நினைவுகூர்ந்ததோடு தம் பெற்றோருக்குக் கனம் பண்ணியவாறு அவர்களுடன் புறப்பட்டு போனார். (லூக் 2:47–51) இவ்வாறு இயேசுவும் தம் தாய் தந்தையருக்குக் கீழ்படிவாகவும், தந்தையின் தச்சு வேலைகளில் உதவி புரிபவராகவும் பல வழிகளில் சிறந்து விளங்கினார்.

மேலும் சூசை, இறைவனுக்கு ஏற்புடைய நீதிமானாகவும், தம் குடும்ப நலனில் அக்கறை கொண்டவராக பலவாறான கஷ்டங்கள் மத்தியிலும் எடுத்துக்காட்டான தியாக வாழ்க்கை வாழ்ந்து காட்டினார்.

ஆகவே நம் குடும்பம் ஒரு கோயில் ஆக வேண்டுமானால் திருக்குடும்ப வாழ்வைப் பின் பற்றுவதே மேன்மையுடையது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபிக்கிறோம்! செபிக்கிறோம்! பயனென்ன?

இறையருள் வேண்டி எந்த நாளும் செபிக்கின்றோம். வாய் செபிக்கிறது. உள்ளத்துடன் ஒன்றித்து உணர்ந்து செபிக்கின்றோம் என்றால் மிக நல்லது. இல்லையெனில் பலனெதுவும் இல்லை. உள்ளம் எங்கோ அலைய உதடுகள் மந்திரங்களை உதிர்க்கின்றன. அதனாலேதான் நாம் சொல்லும் செபம், வேண்டுதல்கள் பயனற்றுப் போகின்றன. அந்த வகையில் ஏனைய கிறீஸ்தவர்களின் செபம் சற்று உயர்ந்தவை என்றே தோன்றுகிறது. ஏனெனில் அவர்கள் செபிக்கும் வேளையில் தம்முள்ளத்திலிருந்து செபங்களைச் சொல்கின்றனர். உடனுக்குடன் உண்டாக்கி உருவாக்கிச் செபிக்கின்றனர். ஆனால் நாமோ மந்திரங்களைச் செபிக்கின்றோம். உள்ளத்தால் உணர்ந்து சொல்லும் போது அது உன்ன தமான பலனைத் தருகின்றது. வாயொன்று சொல்ல உள்ளம் வேறொன்றில் நிலைக்கு மானால் அதனால் பயனில்லை யல்லவா? ஒரு சிறு எடுத்துக் காட்டாக இக் கதையைக் கவனிப்போம்.



ஒரு நாள் ஆயர் ஒரு வர் காட்டு வழியாகத் தமது குதிரையில் வந்து கொண்டிருந்தார். அவ் வழியாக ஒரு கிறீஸ்தவனும் வந்து கொண்டிருந்தான். ஆயரைக் கண்டதும் அவன் தன் உள்ளத்தி லிருந்த சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்பினான் ஆயரை நிறுத்தினான். சந்தேகத்தைத் தீர்க்க, பணிவுடன் "ஆயரே! நான் எத்தனையோ மந்திரங்களைத் தினமும் செபிக்கின்றேன். வேண்டுதல் செய்கின்றேன். அவை எதுவும் எனக்குக் கிடைக்கவில்லையே! ஏன்? என்று கேட்டான். அதற்கு ஆயர் நாம் எத்தனையோ செபங்களை வாயினாற் சொல்லுகின்றோம். ஆனால் உள்ளத்தோடு உணர்ந்து செபிக்கின்றோமா? அதனால் தான் நம் செபங்கள் விரைவில் கிடைப்பதில்லை. சரி இப்போது ஒரு பரீட்சை. நீ ஒரு பரலோகமந்திரத்தைச் சொல். நீ பக்தியோடு வேறு கவலைகளின்றிச் சொன்னால் இந்தக் குதிரையை உனக்குக் கொடுப்பேன்" என்றார். இது தானா பெரிய விடயம்! இதோ சொல்லி விடுகிறேன் என்றான். பின்னர் பரலோக மந்திரத்தைச் சொல்லத் தொடங்கினான். இடையில் செபத்தை நிறுத்தி, "ஆயரே கடிவாளத்துடன் தருவீரா? அல்லது வெறுமனே தருவீர்களா? " என்று கேட்டான். ஆயருக்குப் பொறுக்க முடியாத சிரிப்பு வந்து விட்டது. 'பார்த்தாயா! ஒரு பரலோக மந்திரத்தைப் பராக்கில்லாமல் சொல்ல உன்னால் முடியாவில்லையே! அப்படித்தான் நாம் உள்ளத்தால் செபிக்கத்தவறி விடுகின்றோம். அதனால் நம் வேண்டுதல்கள் விரைவில் கிடைப்பதில்லை" என்றார்.

வாசக நேயர்களே! இச்சிறுகதை நம் செபத்திலுள்ள குறையை விளக்குகிறது. எனவே இனியாவது நாம் செபிக்கும் போது உள்ள ஒன்றிப்போடு உணர்ந்து பக்தியோடு செபிப்போம். செபிக்க முயலுவோம். அதனால் நிறைந்த பயனைப் பெறுவோம். காரணிக் கங்களில் தியானிப்போமாக என்று கூறப்படு கிறதல்லவா? நமது உதடு மந்திரங்களைச் சொல்ல உள்ளம் அந்தக் காரணிக்க நிகழ்ச்சிகளைச் சிந்திக்க வேண்டும். உதாரணமாக "கபிரியேல் தூதன் தேவ தாயார்க்கு மங்கள வார்த்தை சொன்னதைத் தியானிப் போமாக" என்று சொல்கிறோம்.

நமது உதடுகள் "அருள் நிறை மரியே" எனச் செபிக்கும் போது உள்ளத்தில் தேவதாய் செபித்துக் கொண்டிருக்கிறாள். வானதூதர் கபிரியேல் செய்தியைச் சொல்கிறார். மரியாள் "இதோ உமது அடிமை உமது வார்த்தையின் படியே எனக்காகக்கடவது எனக் கூறும் நிகழ்வு நம்முள்ளத்திற் காட்சி தரவேண்டும். அதனை நாம் தியானிக்க உதடுகள் "அருள்நிறைமரியே"எனும் மங்கள வார்த்தைச் செபத்தைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். இப்படிச் செபித்தால் நமது செபத்தில் நிச்சயம் பயனுண்டு. இதை விடுத்து இன்னும் இவர் வரக்காணோமே" டியூசனுக்குப் போன பிள்ளை இன்னும் வர வில்லையே " நாளை காலையுணவுக்கு என்ன தயாரிக்கலாம் என நமது மனம் அலைபாயுமானால் செபிப்பதால் என்ன பயன்? எனவே சிறிது நேரம் தான் செபிப்பதென்றாலும் மனத்தை அலை மோதவிடாமல் மனத்தாலும் செபிக்கப் பழகுவோம். செபம் ஜெயம்!

ஆக்கம்: திருமதி றோஸ் ஜோசப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுப் போட்டி



**பிள்ளைகளுக்கு மட்டும்**

முடிவுத்திகதி 30 - 06 - 2004

# விவிலியம் கற்போம் - 30

## *எகிப்தில் தண்ணீர் இரத்தமயமாதல்*

(விடுதலைப்பயணம் 7:14-25)

ஆண்டவர் மோசேயை நோக்கி; “பார்வோனின் மனம் இறுகிப்போய் விட்டது. மக்களைப் போக விட............................ மறுக்கிறான். எனவே, ............................ நீ பார்வோனிடம் போ, அப்பொழுது அவன் தண்ணீரை நோக்கிச் சென்று கொண்டிருப்பான். அவனைச்சந்திக்க நீ நைல் நதிக்கரையிலே நின்றுகொள். நீ அவனிடம் கூற வேண்டியது, பாலைநிலத்தில் ............................ வழிபாடு செய்யும் படி என் மக்களைப் போக விடு. நீயோ............................ செவிசாய்க்கவில்லை. என் ............................ கோலால் நானே நைல் நதி நீரை அடிப்பேன்; அது இரத்தமாக மாறும், மீன்கள் செத்துப்போக அது நாற்றம் எடுக்கும். எகிப்தியர் நைல்நதி நீரை குடிக்க முடியாமல் திணறுவர். இதனால் நானே ஆண்டவர் என ............................ நீ அறிந்து கொள்வாய்” என்று ஆண்டவர் கூறுவதாக பார்வோனுக்குச் சொல் என்றார். அவ்வாறே ஆண்டவர் கட்டளைப்படி மோசேயும், ஆரோனும் செய்தார்கள். ஆரோன் கோலை உயர்த்தி பார்வோன் முன்னிலையிலும் ............................ அவருடைய அலுவலர் முன்னிலையிலும் நைல் நதி நீரில் அடித்தார். நைல்நதி ............................ ............................ இரத்தமாக மாறியது மீன்கள் செத்துப் போக நைல் நதி நாற்றம் எடுத்தது, எகிப்தியர் அந் நீரைப் பருக இயலாமல் போயிற்று. இது போலவே எகிப்திய மந்திரவாதிகளும் ............................ செய்து காட்டினர். பார்வோனின் மனம் கடினப்பட்டது. அவன்............................ செவிசாய்க்கவில்லை. எகிப்தியர் ............................ நைல்நதிப் பகுதிகளில் குடிநீருக்காகத் தோண்டினார்கள். அவ்வாறு 7 நாட்கள் கடந்தன.

**விடைகள்:** **எல்லோரும், முழுவதும், அவன், அவர்களுக்கு, வித்தைகளால், காலையில், மற்றும், எனக்கு, இதுவரை, கையிலுள்ள**

வினாப் படிவத்திலேயே விடைகளை அனுப்புதல் வேண்டும் வேறாக அனுப்பப்படும் விடைகள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி

பிள்ளைகளுக்கு மட்டும்
முடிவுத்திகதி 30- 06 - 2004

## அறிவை வளர்ப்போம் - 30

(சரியான சொற்களின் கீழ்க் கோடிடுக)

1. உலகின் மிகப் பெரிய நாடு?
சீனா, ரஷ்யா, அமெரிக்கா

2. இலங்கையில் மிருகக்காட்சி சாலை அமைந்துள்ள இடம்.
தெகிவளை, கළුபோவிலை, சிங்கராஜவனம்

3. ஒலிம்பிக் போட்டியை முதன் முதலாக ஆரம்பித்த நாடு?
கிரேக்கம், இத்தாலி, பிரான்ஸ்

4. கிரிக்கட் உலகில் முதல் இடத்தில் உள்ள வேகப்பந்து வீச்சாளர்.
அக்தர், பிரட்லீ, சமிந்தவாஸ்

5. மரணதண்டனையை எதிர்த்துப்பேசும் "விருமாண்டி" திரைப்படத்தின் முன்னைய பெயர்
கள்ளழகர், சண்டியர், தளபதி

6. எந்தவொரு விசைக்கும் எதிர் விசை உண்டு என்னும் உண்மையைக் கண்டு பிடித்தவர்.
நியூட்டன், கலிலியோ, ஐன்ஸ்டின்

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

**அனுப்பவேண்டிய முகவரி**
விவிலியம் கற்போம்/ அறிவை வளர்ப்போம் 30
தொண்டன்,
அ.பெ.எண் 44
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

## விவிலியம் கற்போம் - 29



பாலைவனத்தில், என், நான், எபிரேயரின். மூன்றுநாள், நீர், மக்களிடம், இன்னும், வெற்றுப், வாளை

## அறிவினை வளர்ப்போம் - 29



1. ஜெ. ஆர். ஜெயவர்த்தனா
2. அமிர்தமும் நஞ்சு
3. கல்கி
4. கீரவாணி
5. அலஸ்கா
6. 22

*ஒருவர் மட்டுமே இருபிரிவுகளுக்கும் சரியான விடையளித்து ரூபா 100 பரிசு பெறுகிறார்.*

**பி. பிரதீப்காந்**
இல.4 புனித செபஸ்தியார் வீதி,
மட்டக்களப்பு.

*ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடையளித்து ரூபா 50 பரிசு பெறுவோர்.*

**கிளாரன் ஜோன்**
இல,33 பிரதான வீதி,
கல்முனை.

**செல்வி. I. J. ரக்ஷினி**
இல. 11/3 குமரத்தர் ஒழுங்கை,
ஜெயந்திபுரம். மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்து வரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள்.
## தமிழ் - ஜுன் 2004

**கத்தோலிக்க நற்சிந்தனைகள்** - காலை 5.00 மணி.
நாள்கள் : 01, 02, 03, 04 - 12, 13, 14, 15, 16, 17, 18 - 26, 27, 28, 29, 30.

**சிறுவர் உலகம்** *(கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி)*
நேரம் : மாலை 9.30 மணி.
நாள்கள் : 08, 12.

**புதிய உலகம்** *(வளர்ந்தோர் நிகழ்ச்சி)*
நேரம் : மாலை 5.30 மணி
நாள்கள் : 06, 20.

**கிறிஸ்தவ தமிழ் நிகழ்ச்சிகளின் ஒலிபரப்பு நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன. இம்மாற்றம் தற்காலிகமானதுதான் மீண்டும் மாற்றங்கள் நிகழும்போது நேயர்களுக்கு அறியத்தருவோம்.**

*நிகழ்ச்சித் தொகுப்பு* : மலர்வேந்தன்

*தொடர்பு* : சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் 44
மட்டக்களப்பு.

*Wanasinghe Printers, Batticaloa*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org